Registered as a Newspaper

# உதயன்

புதன் பொய்கை

விலை ரூ. 50

பக்கங்கள் 16

சுடர் : 38
கதிர் : 88

புதன்கிழமை 22 பெப்ரவரி 2023

மாசி 10 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2054

வடமராட்சிக்கான
உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
கிளைக் காரியாலயம் தற்போது
மாலுசந்தி அல்வாயில்
கிளைப் பணிமனையில் செய்திகள் மற்றும் விளம்பரங்களை காலை 08.30 முதல் இரவு 10.00 மணிவரை கையளிக்கலாம்.
T.P: 021 4927 454, 077 120 9996

# பொருளாதார நெருக்கடி ஒப்பீட்டளவில் குறைவாம்

## கண்டியில் ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு

கொழும்பு, பெப்ரவரி 22

நாட்டில் பொருளாதார நெருக்கடி முன்னரை விடவும் தற்போது ஓரளவு குறைந்துள்ளது. நாடு இந்தப் பொருளாதார நெருக்கடிக்குள் இருந்து மீட்சியடைவதற்கு ஒரேயொரு ஏணி சர்வதேச நாணய நிதியமே – என கண்டியில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற நிகழ்வொன்றில் வைத்துத் தெரிவித்துள்ளார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க. »15

சர்வதேச நாணய நிதியம்

## கடனை வழங்குவதற்காக 15 நிபந்தனைகள் விதிப்பு!

### அதிலொன்றே மின்கட்டணம் ரணில் வெளிப்படைப் பேச்சு

கொழும்பு, பெப். 22

இலங்கை பொருளாதார நெருக்கடியிலிருந்து மீண்டு வருவதற்காக சர்வதேச நாணய நிதியம் 15 நிபந்தனைகளை விதித்தது. அவற்றில் »15

இந்து சமயப் பேரவையின்

## ‘ஊடக சாம்ராச்சியப்பேரரசு’ உதயனுக்கு இன்று விருது!

யாழ்ப்பாணம், பெப். 22

ஊடக சாம்ராச்சியப் பேரரசு என்ற விருது ‘உதயனுக்கு’ இன்று வழங்கப்படவுள்ளது. »15

## மதமாற்றத் தடைச்சட்டம் இலங்கையில் வேண்டும்!

சாகல ரத்நாயக்கவிடம் அர்ஜூன் சம்பத் வலியுறுத்து

கொழும்பு, பெப். 22

இலங்கையில் இந்துக்களின் எண்ணிக்கை முன்பு 24 வீதமாக இருந்தது. இப்பொழுது 12.3 »11

சனசமூக நிலைய விழாவில்

## லேசர் கதிர்வீச்சால் வினை; 50 பேருக்குக் கண் பாதிப்பு!

விரிவு:- பக்.15



முன்னாள் துணைவேந்தர்

## 'மாமனிதர்' விக்னேஸ்வரனுக்கு யாழ். பல்கலையில் அஞ்சலி!

யாழ்ப்பாணம், பெப். 22

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் முன்னாள் துணை வேந்தர் 'மாமனிதர்' விக்னேஸ்வரனின் புகழுடலுக்கு யாழ்ப்பாணப் »15

## 21,000 கடலட்டைகளுடன் 12 சந்தேகநபர்கள் கைது


விரிவு - பக். 15






# 3 மாதங்களில் நீக்கப்படவுள்ள எரிபொருள் கியூஆர் முறைமை

## எரிசக்தி அமைச்சர் தகவல்



**கொழும்பு, பெப்.22**

**எரிபொருள் விநியோகத்துக்காக தற்போது நடைமுறையில் உள்ள கியூஆர் முறைமை எதிர்வரும் 3 மாதங்களின் பின்னர் நீக்கப்படும் என்று மின்சக்தி, எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.**

தொலைக்காட்சி நிகழ்வொன்றில் கருத்துத் தெரிவித்தபோதே மின்சக்தி அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

மின்சாரசபையை மறுசீரமைப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. அதுதொடர்பான யோசனை அடுத்த மாதம் நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்படும்.

அதேவேளை, தற்போது நடைமுறையில் உள்ள எரிபொருள் விநியோகத்துக்கான கியூஆர் முறைமையை நீக்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும்.

எதிர்வரும் 3 மாதங்களின் பின்னர் கியூஆர் முறைமை நீக்கப்படும்- என்றார். (எ-இ)



# மீசாலைப் பகுதியில் கைக்குண்டு மீட்பு

யாழ்ப்பாணம், பெப்.22

கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மீசாலைப் பகுதியில் கைக்குண்டு ஒன்று நேற்றுமுன்தினம் மீட்கப்பட்டுள்ளது.

மீசாலை தட்டான்குளம் பகுதியிலுள்ள காணியொன்றில் சந்தேகத்துக்கிடமான பொருள் ஒன்றை அவதானித்த நிலையில் உரிமையாளரால் கொடிகாமம் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டது.

தகவலுக்கமைய காணிக்கு விரைந்த கொடிகாமம் பொலிஸார் சந்தேகத்துக்கிடமான பொருளை கைக்குண்டு என அடையாளம் கண்டனர்.

நீதிமன்றத்தின் அனுமதிபெற்று கைக்குண்டை செயலிழக்கச் செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனப் பொலிஸார் தெரிவித்தனர். (ச-125)

# அதிபர் நியமனத்துக்கு ஆணைக்குழு அனுமதி

கொழும்பு, பெப். 22

4 ஆயிரத்து 800 அதிபர் வெற்றிடங்களை நிரப்புவதற்கு அரச சேவை ஆணைக்குழு அனுமதி வழங்கியுள்ளது.

அதிபர் நியமனத்துக்கு சுமார் 10 ஆயிரம் பேர் விண்ணப்பித்துள்ள நிலையில், இதுதொடர்பான நேர்காணல்களை இந்த வாரம் முதல் ஆரம்பிக்க கல்வி அமைச்சு திட்டமிட்டுள்ளது.

அதிபர் வெற்றிடங்களை நிரப்புவதற்கு அனுமதிக்கவேண்டும் என்று கல்வி அமைச்சு விடுத்த கோரிக்கைக்கு பதிலளிப்பதில் தொடர்ந்தும் தாமதம் ஏற்பட்டால், கல்வி அமைச்சர் கலாநிதி சுசில் பிரேம்ஜயந்த நாடாளுமன்றத்தில் ஆட்சேபனை தெரிவித்திருந்த நிலையில், அரச சேவை ஆணைக்குழு இதற்கு அனுமதி வழங்கியுள்ளது. (எ-14,இ)



# காரைநகர் கடற்பரப்பில் ரூ. 42 மில்லியன் பெறுமதியான கேரளக் கஞ்சாப்பொதிகள் மீட்பு

யாழ்ப்பாணம், பெப். 22

காரைநகர் கடற்பரப்பில் கடலில் மிதந்த நிலையில் 42 மில்லியன் ரூபா பெறுமதியான கேரளக் கஞ்சாப்பொதிகள் மீட்கப்பட்டுள்ளன.

காரைநகர் கடற்பரப்பில் கடந்த ஞாயிற்றுக்கிழமை கடற்படையினரால் மேற்கொள்ளப்பட்ட விசேட சோதனையின்போது இந்தப் பொதிகள் கைப்பற்றப்பட்டன. 3 பொதிகளில் மிதந்து வந்த 128 கிலோகிராம் எடையுடைய கேரளக் கஞ்சாவே மீட்கப்பட்டது எனத் தெரிவிக்கப்படுகிறது.

கடத்தல்காரர்கள் இந்தப் பொதிகளைக் கரைக்குக் கொண்டுவர முடியாது கடற்பரப்பில் விட்டுச் சென்றிருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகிறது. மீட்கப்பட்ட பொதிகள் சட்டநடவடிக்கைக்கு ஒப்படைக்கும் வரை கடற்படையினரின் காவலில் வைக்கப்பட்டுள்ளது என கடற்படையினர் தெரிவித்துள்ளனர். (ச-213)

# மோட்டார் சைக்கிள் திருட்டு; தகவல் வழங்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம், பெப்.22

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒருவரின் மோட்டார் சைக்கிள் திருடப்பட்டமை தொடர்பில் தகவல் தெரிந்தால் வழங்குமாறு பொதுமக்களின் உதவியை பொலிஸார் நாடியுள்ளனர்.

இந்தத் திருட்டுச் சம்பவம் கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கோண்டாவில் சந்தியில் சிவராத்திரி தினத்தன்று இடம்பெற்றது.

திருட்டுத் தொடர்பில் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் மாணவனால் அளிக்கப்பட்ட முறைப்பாட்டுக்கமைய பொலிஸார் குறித்த மோட்டார் சைக்கிளின் விவரத்தை காட்சிப்படுத்தி பொதுமக்களின் உதவியை நாடியுள்ளனர். (ச-26)

# அதிவேக வீதிகளின் கட்டணமும் அதிகரிப்பு

கொழும்பு, பெப். 22

அதிவேக வீதிகளில் பயணிக்கும் வாகனங்களிடமிருந்து அறவிடப்படும் கட்டணங்களை அதிகரிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பராமரிப்புச் செலவுகளைக் கருத்தில்கொண்டு இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் உயர் அதிகாரியொருவர் தெரிவித்தார். புதிய கட்டணத் திருத்தம் விரைவில் நடைமுறைப்படுத்தப்படும் என அவர் மேலும் குறிப்பிட்டார். (ச-இ)

# நீதிபதிகளின் சம்பள விவகாரம்; தடை உத்தரவு மீண்டும் நீடிப்பு

கொழும்பு, பெப். 22

நீதிபதிகளின் சம்பளத்தில் வருமானம் ஈட்டும்போது வரி செலுத்துவதைத் தடுக்கும் வகையில் பிறப்பிக்கப்பட்ட தடை உத்தரவை மேலும் நீடித்து மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று செவ்வாய்க்கிழமை உத்தரவிட்டுள்ளது.

இலங்கை நீதித்துறை அதிகாரிகள் சங்கம் மற்றும் இலங்கை மேல் நீதிமன்ற நீதிபதிகள் சங்கம் ஆகியவற்றால் சமர்ப்பிக்கப்பட்ட இரண்டு மனுக்கள் இன்று அழைக்கப்பட்டபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. (எ-14,இ)

# ஏப்ரல் மாதம்வரை மசகு எண்ணெய் தாராளம்

## பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அறிவிப்பு

கொழும்பு, பெப்.22

எதிர்வரும் ஏப்ரல் மாதம்வரை போதுமான மசகு எண்ணெய் கையிருப்பில் உள்ளது என பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது. இது தொடர்பில் கூட்டுத்தாபனத்தின் பேச்சாளர் தெரிவித்துள்ளதாவது,

சபுகஸ்கந்த சுத்திகரிப்பு நிலையத்தில் தற்போது நாளொன்றுக்கு 30 ஆயிரம் பரல் எரிபொருள் சுத்திகரிக்கப்பட்டு விநியோகிக்கப்படுகிறது.

அதற்கமைய 800 மில்லியன் ரூபா பெறுமதியான எரிபொருள் இலங்கை மின்சாரசபைக்கு வழங்கப்படவுள்ளது. அதற்கான கட்டணத்தை இலங்கை மின்சாரசபை, எதிர்வரும் நாள்களில் செலுத்தவுள்ளது.

உபரியான சுத்திகரிப்பு எரிபொருள் களஞ்சியப்படுத்தப்படுவதுடன் களஞ்சியப்படுத்தப்படும் எரிபொருள் கப்பல்கள் மூலம் திருகோணமலை எண்ணெய்த் தாங்கி வளாகத்துக்கு அனுப்பப்படவுள்ளது எனவும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### புத்த தந்ததாது அவமதிப்பு:

## மன்னிப்புக் கோரியதையடுத்து சேபால் அமரசிங்க விடுவிப்பு



கொழும்பு, பெப்.22

தலதா மாளிகையை அவமதித்தமை தொடர்பில் சமூகச் செயற்பாட்டாளர் சேபால் அமரசிங்கவால் மன்னிப்புக் கோரப்பட்டதைத் தொடர்ந்து அவருக்கு எதிரான வழக்கை முடிவுறுத்தி நேற்று விடுதலை செய்தது கொழும்பு நீதிவான் நீதிமன்றம்.

தலதா மாளிகையின் புத்தபெருமானின் புனித தந்ததாதுக்களை அவமதித்து பௌத்த மக்களிடையே குழப்பத்தை ஏற்படுத்தும் விதமாக சமூக வலைத்தளங்களில் சேபால் அமரசிங்க கருத்து வெளியிட்டிருந்தார் என்று குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

இது தொடர்பாக பொலிஸ் தலைமையகத்துக்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளுக்கமைய அவர் கைதுசெய்யப்பட்டு அவருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

இந்த வழக்கு கொழும்பு பிரதான நீதிவான் பிரசன்ன அல்விஸ் முன்னிலையில் நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டது. மன்றில் முன்னிலையான பிரதிவாதி சேபால் அமரசிங்க மகாநாயக்க தேரர்களிடமும் பௌத்த சமூகத்திடமும் நிபந்தனையற்ற மன்னிப்புக் கோருகின்றேன் என்று தெரிவித்தார்.

அதற்கமைய சேபால் அமரசிங்கவை குறித்த வழக்கிலிருந்து விடுவிக்க நீதிவான் உத்தரவிட்டார். (ச-இ)

# தேர்தலை நடத்தக்கோரி நாடாளுமன்றத்தில் அமளி

### இன்றுவரை அமர்வு ஒத்திவைப்பு

கொழும்பு, பெப்.22

உள்ளூராட்சிசபைத் தேர்தலை ஒத்திவைக்க முற்படாமல் அதை உரிய காலப்பகுதிக்குள் நடத்துமாறு வலியுறுத்தி எதிரணிகள் சபைக்குள் முன்னெடுத்த போராட்டத்தால் நாடாளுமன்ற அமர்வு இன்று முற்பகல் 9.30 மணிவரை ஒத்திவைக்கப்பட்டது.

நாடாளுமன்றம் நேற்று முற்பகல் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன தலைமையில் கூடியது. நாடாளுமன்ற அமர்வு ஆரம்பமானது முதல், தேர்தல் பற்றி எதிரணி உறுப்பினர்கள் கேள்வி எழுப்பிக் கொண்டே இருந்தனர்.

தேர்தலை நடத்தாவிட்டால் ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகை இல்லாமல் போகக்கூடும் என நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியல்ல சுட்டிக்காட்டினார். விமல் வீரவன்ஸ உள்ளிட்டவர்களும் கருத்துகளை வெளியிட்டுக்கொண்டிருந்தனர்.

அவ்வேளையில் ஐக்கிய மக்கள் சக்தி, சிறிலங்கா சுதந்திரக்கட்சி, சுதந்திர மக்கள் கூட்டணி என்பவற்றின் உறுப்பினர்கள் சபைக்கு நடுவில் வந்து, வேண்டும், வேண்டும் தேர்தல் வேண்டும் எனக் கோஷம் எழுப்பினர். சபாபீடத்தையும் முற்றுகையிட்டு, சபை நடவடிக்கைக்கு இடையூறு விளைவித்தனர். இதனால் சபைக்குள் குழப்பநிலை உருவானது.

எதிரணி உறுப்பினர்களுக்கு அருகில் வந்த சிறிலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம், தேர்தலை நடத்து எனக் கோஷம் எழுப்பியதைக் காணமுடிந்தது.

இவ்வாறு கூச்சல், குழப்பம் நீடித்ததால் சபை நடவடிக்கைகளை நாளை (இன்று) முற்பகல் 9.30 மணிவரை ஒத்திவைப்பதாக சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன குறிப்பிட்டார். (எ-44)

## மின் கட்டண உயர்வு மக்களுக்கு பேரிடி!

### சி.கா.செந்திவேல் காட்டம்

யாழ்ப்பாணம், பெப். 22

தற்போது அதிகரிக்கப்பட்டுள்ள மின்சாரக் கட்டணம் உழைக்கும் மக்களின் தலைகளில் பேரிடியாகியுள்ளது என்று புதிய மாக்சிச லெனினிசக் கட்சியின் பொதுச் செயலாளரும், மூத்த பொதுவுடைமைவாதியுமான சி.கா.செந்திவேல் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் நேற்று முன்தினம் திங்கட்கிழமை வெளியிட்ட ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

ஒருபுறம் ஜனநாயக மறுப்புக்களும், மறுபுறம் கொடிய அடக்கு முறைகளும் கொண்ட பாசிச சர்வாதிகார ஆட்சியைக் குறுக்கு வழி ஜனாதிபதியான ரணில் விக்கிரமசிங்கவும், அவருக்குப் பின்னாலிருந்து ஆலோசனை வழங்கி வரும் ஊழல்வாதிகளும் முன்னெடுத்து வருகின்றனர்.

அதேவேளை, உள்ளூராட்சித் தேர்தலைச் சதி நடவடிக்கைகள் மூலம் ஒத்திவைக்கச்செய்து தமது ஜனநாயக விரோதத்தைக் காட்டியும் உள்ளனர். ஆட்சியை எதிர்த்து மக்கள் சார்பாகக் குரல் கொடுப்போர் மீது பொலிஸ் அடக்குமுறையைக் கட்டவிழ்த்து விட்டுள்ளனர்.

காலிமுகத்திடல் மக்கள் எழுச்சிக்குப் பின் இலங்கை மக்கள் மத்தியில் உருவாகி வந்த ஒற்றுமை உணர்வைத் திசை திருப்பும் வகையில் ரணில் விக்கிரமசிங்க "சுதந்திர தினத்துக்கு முன்பு இனப் பிரச்சினைக்குத் தீர்வு" எனக் கூறித் தெற்கே பேரினவாதத்தையும், வடக்கே குறுந்தேசிய வாதத்தையும் கிளறி மக்களின் கவனத்தைத் திசை திருப்பித் தமது ஆளும் வர்க்கப் பிடியை இறுக்கியுள்ளார். இதன்பின்னணியிலேயே தற்போது அதிகரித்துள்ள மின்கட்டணம் மக்களுக்குப் பேரிடியாகியுள்ளது. ஏற்கனவே பொருளாதார நெருக்கடியில் சிக்கிக் கொண்டுள்ள மக்களுக்கு மின் கட்டண உயர்வு பெரும் தாக்கமாகவுள்ளது. இத்தகைய அபாயத்தைத் தடுத்து நிறுத்தும் சக்தி நாட்டின் உழைக்கும் மக்களிடமே உண்டு. இவற்றுக்கு எதிராக மக்கள் போராட்டங்களை முன்னெடுப்பதே ஒரே வழி என்பதையே எமது கட்சி வலியுறுத்துகிறது- என்றுள்ளது. (எ-14,66)

## நெருக்கடியை தாங்கினால் எதிர்காலம் மகிழ்ச்சியாம்

கொழும்பு, பெப். 22

தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடிகளைத் தாங்கி சிறிதுகாலம் துன்பப்பட்டால் நீண்டகாலம் மகிழ்ச்சியை அனுபவிக்கமுடியும் என்று இராஜாங்க அமைச்சர் கீதா குமாரசிங்க தெரிவித்துள்ளார். எல்பிட்டியப் பிரதேசத்தில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தற்போதைய கஷ்டங்களைத் தாங்கிக் கொண்டு கடினமாக உழைத்தால் எதிர்காலத்தில் மகிழ்ச்சியை அனுபவிக்கமுடியும். மின்கட்டணம் அதிகளவில் அதிகரிக்கும்போது மின் கட்டணத்தைச் செலுத்துவது கடினம் என்பதை நானும் ஒப்புக்கொள்கிறேன். ஆனால் குறுகிய காலத்துக்கு இந்தச் சிரமங்கள் அனைத்தையும் தாங்கிக்கொள்ளவேண்டும் - என்றார். (எ-14,இ)

## மாணவர் வெளியேறினாலே கற்றல் செயற்பாடு ஆரம்பம்

### சப்ரகமுவ பல்கலை அறிவிப்பு

கொழும்பு, பெப். 22

சப்கரமுவ பல்கலைக்கழக விடுதிகளில் தங்கியுள்ள அனைத்து மாணவர்களும் வெளியேறினால் மாத்திரமே மீண்டும் கற்றல் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படும் என சப்கரமுவ பல்கலைக்கழக நிர்வாகம் அறிவித்துள்ளது.

சப்ரகமுவ பல்கலைக்கழகத்தில் கடந்த 15 ஆம் திகதி முகாமைத்துவப் பீடத்தில் முதலாம் வருட மாணவர்களுக்கும் பிறிதொரு மாணவ குழுவுக்குமிடையில் மோதல் ஏற்பட்டது.

மோதலில் 9 மாணவர்கள் காயமடைந்த நிலையில் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். அதையடுத்து பல்கலைக்கழகம் காலவரையறையின்றி மூடப்படுகிறது என பல்கலைக்கழக நிர்வாகம் அறிவித்தது. மாணவர்களிடையே மீண்டும் முரண்பாடுகள் ஏற்படுவதைத் தவிர்க்கும் வகையில் பல்கலைக்கழகத்திலிருந்து மாணவர்கள் வெளியேறவேண்டும் என்று அறிவிக்கப்பட்டது.

எனினும் சில மாணவர்கள் பல்கலைக்கழக வளாகத்திலேயே தங்கியுள்ளனர் எனவும் பல்கலைக்கழக நிர்வாகத்தின் கட்டளையை மாணவர்கள் பின்பற்றாது விடின் கற்பித்தல் செயற்பாடுகளை விரைந்து ஆரம்பிக்க முடியாத நிலை காணப்படும் எனவும் பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் உதய ரத்நாயக்க தெரிவித்தார்: (ச-இ)

## எரிவாயு சிலிண்டரின் நிறம் மாற்றி மோசடி!

லாப்ஸ் சமையல் எரிவாயு நிறுவனத்துக்குச் சொந்தமான மஞ்சள் நிற எரிவாயு கொள்கலன்களை நீல நிறத்தில் நிறம் மாற்றி ஏற்றிச்சென்ற கனரகவாகனம் ஒன்று பொலிஸாரால் சுற்றிவளைக்கப்பட்டுள்ளது.

கடவத்தை அதிவேக நெடுஞ்சாலையின் நுழைவுப் பகுதியில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை காலை மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கைகளின் போதே குறித்த கனரகவாகனம் பொலிஸாரால் சுற்றி வளைக்கப்பட்டது. இந்தசோதனைநடவடிக்கையின் போது லாப்ஸ் எரிவாயு நிறு வனத்துக்குச் சொந்தமான மஞ்சள் நிற எரிவாயு கொள்கலன்கள் நீல நிறத்தில் நிறம் மாற்றி எடுத்துச்செல்லப்பட்டமை கண்டறியப்பட்டது. (எ-14,இ)

## நாடாளுமன்றின் சுயாதீனம்: ஜனாதிபதியால் ஆக்கிரமிப்பு

### சரித ஹேரத் சுட்டிக்காட்டு

கொழும்பு, பெப். 22

நிதி அதிகாரம் நாடாளுமன்றம் வசம் காணப்படும் பின்னணியில் நாடாளுமன்றத்தின் சுயாதீன செயற்பாடுகளுக்கு தடை ஏற்படுத்தி உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான நிதிவிடுவிப்பை தாமதப்படுத்துகிறார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க. இவ்வாறு எதிர்த்தரப்பின் சுயாதீன நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் சரித ஹேரத் தெரிவித்தார்.

உள்ளூராட்சிமன்றத் தேர்தல் விவகாரம் தொடர்பில் வினவியபோது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிட்டதாவது:-

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றத்தின் அதிகாரத்தை நிறைவேற்று அதிகாரத்தின் ஊடாக ஆக்கிரமித்துள்ளார்.

அரசமைப்பால் சட்டவாக்கத்துறைக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரம் தற்போது முழுமையாக செயற்படுத்தப்படுவதில்லை.

நிதி அதிகாரம் நாடாளுமன்றம் வசமிருக்கும் பின்னணியில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான நிதி விடுவிப்பை நிதியமைச்சு தாமதப்படுத்துகிறது.

பல்வேறு வழிகளினூடாக நாடாளுமன்றத்தின் சுயாதீன செயற்பாடுகளுக்கு தடை ஏற்படுத்தப்படுகிறது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தவறான பொருளாதாரக் கொள்கையால் சிறு மற்றும் நடுத்தர கைத்தொழில்துறை முழுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது. ஜனநாயக உரிமையை பாதுகாத்துக்கொள்ளும்பொருட்டு மக்கள் வீதியில் இறங்கி அஹிம்சை வழியில் போராட வேண்டும் - என்றார். (ச-இ)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதுகாப்பற்ற அரைகுறை மதகால் மூளாய் வீதியில் செல்வோர் அச்சம்!

## சமிக்ஞை இல்லாததால் இரவில் பயணிகள் சிரமம்

யாழ்ப்பாணம், பெப். 22

புனரமைக்கப்படாத மூளாய் வீதியை அண்மித்த பகுதியில் எந்தவித எச்சரிக்கை அறிவித்தலும் இன்றி அரைகுறையாக அமைக்கப்பட்ட மதகு காணப்படுகின்றது. சமிக்ஞை விளக்குகள் இன்றிக் காணப்படும் வீதியால் இரவு வேளையில் பயணிக்கும் மக்களுக்கு பேராபத்துக்கள் ஏற்பட வாய்ப்புகள் அதிகமாக உள்ளன. எனவே வீதிப் போக்குவரத்துக்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.



மானிப்பாய் - காரைநகர் பிரதான வீதியின் புனரமைப்புப் பணிகள் இடம்பெற்று வந்த நிலையில் நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி காரணமாக புனரமைப்புப் பணிகள் யாவும் நிறுத்தப்பட்டன. அதன் ஒருபகுதியாகவே மூளாய் வீதியும் காணப் படுகின்றது.

ஏற்கனவே இருந்த வீதியை விட 'காப்பெற்' செப்பனிடலுக்காக தயார்படுத்தப்பட்ட வீதி தற்போது முற்றிலும் சேதமடைந்த நிலையில் பகல் வேளைகளில் கூட மக்கள் மிக அவதானமாகவே போக்குவரத்தை மேற் கொள்கின்றனர்.

வீதி அபிவிருத்திக்காக வெட்டப்பட்ட மதகுகள் சுமார் ஒரு வருடத்தைக் கடந்தும் மூடப்படாத நிலையில் காணப்படுகின்றன. இரவு வேளைகளில் பாடசாலை மாணவர்கள் உட்பட பலரும் மதகு வழியே போக்குவரத்தை மேற்கொள்ளும் போது தவறி வீழ்ந்து காயங்களுக்குள்ளாகியுள்ளனர். இது தொடர்பாக ஏற்கனவே பலதடவைகள் சுட்டிக்காட்டப்பட்டன.

இந்த நிலையில் தற்பொழுது மூளாயை அண்மித்த பகுதியில் எதுவித எச்சரிக்கை குறியீடுகளோ, இரவு நேர சமிக்ஞைகளோ, தடுப்புக்களோ, கயிறுகளோ இன்றி அரைகுறையாக அமைக்கப்பட்ட மதகு ஒன்று பேராபத்தை ஏற்படுத்தும் வகையில் காணப் படுகின்றது. இவ்வாறான 4 மதகுகள் இந்த வீதியில் காணப்படுகின்றன.

இதற்கான சமிக்ஞைகளை இட்டு அல்லது மதகை மூடி பேராபத்துக்கள் ஏற்படாமல் இரவு வேளையில் போக்குவரத்தை மேற் கொள்ள உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ-14-125)

# உதவிகள் பெறுவோரின் பதிவுகள் முன்னெடுப்பு

தென்மராட்சிப் பிரதேசசெயலக பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் அரச உதவிகள் பெறும் குடும் பங்களின் விவரப் பதிவுகள் கிராமஅலுவலர் பிரிவுகள் ரீதியில் விரைவில் ஆரம்பிக்கப் படவுள்ளன.

உதவி பெறும் குடும்பங்களின் விவரங்களைப் பதிவு செய்து அனுப்பவேண்டும் என்று அரசால் கோரப்பட்டதற்கமைய பிரதேச செயலரால் நியமிக் கப்பட்டுள்ள உத்தியோகத் தர்கள் அரச உதவி பெறும் பயனாளர்களின் வீடுகளுக்கு நேரடியாக வருகை தந்து விவ ரங்களைப் பதிவு செய்யவுள்ள னர். உத்தியோகத்தரால் கோரப் படும் தரவுகளை தாமதமின்றி வழங்கி ஒத்துழைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. அரச உதவி பெறும் அனைத்துக் குடும்பங்களின் விவரங்களை யும் படிவங்களில் தரவுகளாக பெறவுள்ளனர் எனவும், தரவு கள் பெற வருபவர்கள் தொடர பாக சந்தேகம் இருப்பின் பிரதேசசெயலரால் வழங்கப் படும் கடிதத்தைப் பார்வையிட முடியும் என்றும் அறிவிக் கப்பட்டுள்ளது. அவ்வாறான கடிதங்கள் இன்றி தரவு சேக ரிக்க வரும் பட்சத்தில் கிராம அலுவலர் அல்லது பிரதேச செயலகத்துக்கு அறிவிக்குமா றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-14-9)



# தூவானம் திரைப்படத்துக்கு மக்கள் அமோக வரவேற்பு

யாழ்ப்பாணம், பெப். 22

வடக்கு - கிழக்கிலுள்ள பல்வேறு திரையரங்குகளில் வெளியான தூவானம் திரைப்படத்துக்கு தமிழ் மக்கள் மத்தியில் அமோக வரவேற்புக் கிடைத் துள்ளது.

கடந்த 18ஆம் திகதி வெளியான இந்த் திரைப்படம் குறித்தொதுக்கப்பட்ட காட்சிகளையும் தாண்டி இன்னும் வெற்றிநடை போட்டுக்கொண்டிருப்பதால் பொதுமக்களுக்காக மேலதிக திரையிடல்களுக்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இதனால் இன்றும், நாளையும் மாலை 5.30 மணிக்கு யாழ்.ராஜா திரையரங்கில் தூவானம் திரைப்படம் காண்பிக்கப் படவுள்ளதாக அதன் தயாரிப் பாளர் மருத்துவர் சிவன்சுதன் அறிவித்துள்ளார்.

தமிழ் மக்களின் கடந்தகால மற்றும் நிகழ்கால வாழ்வியலைச் சித்தரிப்பதாக இந்தப் படம் உருவாகியுள்ளமை குறிப் பிடத்தக்கது. (அ-ம)

# கச்சதீவு திருவிழாவின் முன்னாயத்த ஏற்பாடு

யாழ்ப்பாணம்,பெப். 22

எதிர்வரும் மார்ச் மாதம் 2ஆம் 3ஆம் திகதிகளில் நடைபெறவுள்ள கச்சதீவு புனித அந்தோனியார் ஆலய திருவிழா வுக்கான ஏற்பாடுகள் தொடர்பான தகவல்கள் யாழ்.மாவட்டச் செயலரால் வெளியிடப்பட்டுள்ளது.

இது தொடர்பில் யாழ்.மாவட்டச்செயலரால் அனுப்பி வைக்கப்பட்ட ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

மார்ச் மாதம் 3 ஆம் திகதி காலை 5 மணி தொடக்கம் முற்பகல் 10 மணி வரை அரச மற்றும் தனியார் பஸ்கள் யாழ்ப்பாணம் பஸ் தரிப்பு நிலையத்திலிருந்து குறிகட்டுவான் வரை சேவையில் ஈடுபடும். கச்சதீவுக்கான படகுச்சேவையானது குறிகாட்டுவானில் இருந்து காலை 6 மணி முதல் முற்பகல் 11 மணி வரை சேவையில் ஈடுபடுத்தப்படும்.

குறிகாட்டுவானில் இருந்து பயணிக்கும் ஒரு நபருக்கான படகுக்குரிய இரு வழிப் பயணக் கட்டணம் 2 ஆயிரம் ரூபாவாகும்.

வெளி மாவட்டங்களிலிருந்து தமது சொந்தப் படகுகளில் திருவிழாவுக்குச் செல்வோர் தமது வசிப்பிடங்களுக்கு அருகிலுள்ள கடற்படை முகாம்களில் தொடர்புகொண்டு உரிய கடற் பயணப் பாதுகாப்பு அனுமதியைப் பெற்றுக் கொள்வதுடன் 3ஆம் திகதி மாலை 6 மணிக்கு முன்னர் கச்சதீவை வந்தடைவதற்கேற்றவாறு தங்களது பயணங்களை ஆரம்பிக்க வேண் டும்.

4ஆம் திகதி கச்சதீவு உற்சவத்தில் கலந்து கொள்ளும் பக்தர்களுக்கான காலை உணவு, இலங்கைக் கடற்படையினரால் வழங்குவதற் கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. கச்சதீவு புனித அந்தோனியார் ஆலயமானது யாத்திரிகர்களின் புனித தலமாகவுள்ளதால் மது பாவனைப்பொருள்கள் கொண்டு செல் லுதல் மற்றும் பாவித்தல் என்பன முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளன என்றுள்ளது. (எ-14-20)


## சமையலாளர் தேவை

யாழ்ப்பாணம் நகரப் பகுதியில் உள்ள வீடொன்றில் சமையல் வேலைக்கு ஆள் தேவை. முன் அனுபவம் கொண்டவர்கள் விண்ணப்பிக்கலாம்.

தொடர்பு : 0751372212



## பராமரிப்பாளர் தேவை

யாழ்ப்பாணம் நகரப் பகுதியில் வயது முதிர்ந்த பெண் ஒருவரைப் பராமரிப்பதற்குப் பணிப் பெண் தேவை.
அனுபவம் வாய்ந்தவர்கள் விரும்பத்தக்கது.

சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்
தங்குமிட வசதி ஏற்படுத்திக் கொடுக்கப்படும்.

தொடர்பு: 0751372212



## பணியாளர் தேவை

சாவகச்சேரி நகரில் இயங்கிவரும் உணவகம் ஒன்றிற்கு கொத்துறொட்டி போடுதல், பிறைட்ரைஸ் தயாரித்தல், றொட்டி வேலை செய்தல் போன்ற மூன்று வேலைகளிலும் அனுபவம் வாய்ந்த பணியாளர் தேவை.

தொடர்புகளுக்கு:077 6491 027

(CR 39294) 1-6


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



**நாளொரு நல்வார்த்தை**

"மனித நடத்தை மூன்று முக்கியமான மூலங்களிலிருந்து ஊற்றெடுக்கின்றது. ஆசை, உணர்ச்சி மற்றும் அறிவு" – பிளேட்டோ

## பருத்தித்தீவும் சில கேள்விகளும்

பருத்தித்தீவில் சீனர்களின் நடமாட்டம் தொடர்பான செய்தி 'உதயனில்' வெளியான மறுநாளே பருத்தித்தீவில் இருந்து பொருள்கள் அவசர அவசரமாக இடமாற்றப்பட்டிருக்கின்றன. அந்தப் பொருள்கள் என்ன என்பதும் யாரின் உத்தரவுக்கு அமைய அவை இடமாற்றப்பட்டன என்பதும் இன்னும் இரகசியமாகவே இருக்கின்றது. பருத்தித்தீவு அண்மைக்காலமாக இலங்கைத்தீவையும் தாண்டி, பெரும் பேசுபொருளாகியிருந்தது. ஆட்களற்ற அந்தச் சிறு தீவில் சீனர்களின் நடமாட்டம் அதிகமாகக் காணப்படுகின்றது என்ற குற்றச்சாட்டு பரவலாக முன்வைக்கப்பட்டிருந்த நிலையில், கடலட்டைப் பண்ணை என்ற போர்வைக்குள் அவர்களின் நடமாட்டங்கள் மறைக்கப்பட்டன. சீனர்களின் முதலீட்டுடன் கடலட்டைப் பண்ணைகள் அமைப்படுகின்றன என்று சப்பைக்கட்டுக்கள் கட்டப்பட்டன. அதன்பின்னர் பருத்தித்தீவில் சீனர்களின் ஆதிக்கம் மறைக்கப்பட்டிருந்தது. ஆனால், சில தினங்களுக்கு முன்னர் மீண்டும் அங்கு சீனர்களின் நடமாட்டம் கண்டறியப்பட்டது.

போரின் பின்னர் இலங்கையைத் தனது ஆதிக்கத்துக்குள் கொண்டுவரும் முயற்சிகளை சீனா முழுவீச்சாக ஆரம்பித்திருந்தது. தெற்கில் அழுத்தமாகத் தனது கால்களைப் பதித்த சீனாவுக்கு வடக்கு – கிழக்கில் கால் பதிப்பது சிரமமானதாகவே இருந்தது. இந்தியாவின் எதிர்ப்பும் தமிழ் மக்களின் ஆதரவின்மையும் சீனாவுக்குப் பெரும் சிக்கலாகவே இருந்தன. அதனால் சீனா உதவிகள் என்ற பெயரிலும், மறைமுகமாகவும் தனது ஆதிக்கத்தைத் தமிழர் பகுதிகளில் நிலைநிறுத்த முயற்சிக்கிறது.

போரால் பாதிக்கப்பட்ட வடக்கில் கடலட்டைப் பண்ணைகள் என்ற பெயரில் சீனத் தலையீடுகள் அதிகரித்தன. பாதிக்கப்பட்ட மக்களுக்கான உதவிகள் என்ற ரீதியில் அவை ஆரம்பிக்கப்பட்டு, அந்தப் பண்ணைகளால் மிகப் பெரும் இலாபம் ஈட்டமுடியும் என்ற நம்பிக்கை மக்கள் மனங்களில் ஊட்டப்பட்டது. அதனால் இந்தக் கடலட்டைப் பண்ணைகளுக்கு மக்கள் மத்தியிலும் சற்று வரவேற்பு இருந்தது. வடக்கில் ஆரம்பிக்கப்பட்ட பெரும்பாலான கடலட்டைப் பண்ணைகளின் பின்னணியில் சீனாவைச் சேர்ந்தவர்கள் இருக்கின்றமை பரகசியம். பருத்தித்தீவில் சீனர்களின் நடமாட்டம் பற்றிய சர்ச்சை எழுந்த போதும், கடலட்டைப் பண்ணைக் கதையைக் கூறியே சமாதானப்படுத்தப்பட்டிருந்தது.

பருத்தித்தீவில் இருந்த பொருள்கள் அவசர அவசரமாக படகுகள் மூலம் இடமாற்றப்பட்டிருந்த நிலையில், அங்கிருந்த கடலட்டைகளும் அப்புறப்படுத்தப்பட்டிருக்கின்றன. அங்கு 40 ஆயிரம் கடலட்டைக் குஞ்சுகள் விடப்பட்ட நிலையில் வெறும் 100 கடலட்டைகளே அறுவடை செய்யப்பட்டுள்ளதால் அந்தப்பகுதி கடலட்டைப் பண்ணைக்குப் பொருத்தமேயில்லாத ஓர் இடமென்பது உறுதியாகிவிட்டது. அப்படிப் பொருத்தமற்ற இடத்தில்தான் கடலட்டைப் பண்ணையை அமைக்க வேண்டுமென சீனா ஒற்றைக்காலில் நிற்பது ஏன்? இவ்வாறு பெரும் நட்டத்தில் பருத்தித்தீவில் கடலட்டைப் பண்ணைகளை நடத்த வேண்டிய தேவை என்ன? என்ற கேள்விகள் இயல்பாகவே எழுகின்றன. இந்தக் கடலட்டைப் பண்ணையை விடவும் வேறு ஏதோ ஒரு விடயத்துக்காகவே சொல்லப்படமுடியாத ஆதாயத்துக்காகவே பருத்தித்தீவு தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறது என்றே கருத வேண்டியிருக்கின்றது.

தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் இலங்கையில் அவர்கள் நீண்டகாலமாக எதிர்நோக்கியிருக்கும் பிரச்சினைகள் தீர்க்கப்பட்டு அவர்களுக்கான உரிமைகள் கிடைக்க வேண்டும். ஆனால், தமிழ் மக்களின் பிரச்சினைகளில் ஆர்வம் காட்டும் நாடுகள் பூகோள ரீதியிலான இலங்கையின் முக்கியத்துவத்தைக் கொண்டே தமிழர் பிரச்சினைகளைக் கையாள்கின்றன. தமிழர் பகுதிகளில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்திகள் – உதவிகள் என அனைத்தின் பின்னாலும் இந்த நோக்கே முக்கியத்துவம் பெறுகின்றது. இந்த அபிவிருத்திகள் உதவிகளின் பின்னுள்ள நோக்கங்களை தமிழ் மக்கள் புரிந்துகொள்ளவேண்டும். மாறாக அபிவிருத்திகள் – உதவிகள் என்ற மாயைக்குள் சிக்கி விடக்கூடாது, அதற்கு பருத்தித்தீவு நல்லதொரு உதாரணம்.




# தேர்தலை நடத்த நிதி திரட்டத் தயார்!

### 'பவ்ரல்' அமைப்பு தெரிவிப்பு

கொழும்பு, பெப். 22

உள்ளூராட்சித் தேர்தலை நடத்துவதற்கான நிதியைத் திரட்டுவதற்கு தேர்தல்கள் கண்காணிப்பு அமைப்புகள் தயார் என பவ்ரல் அமைப்பின் நிறைவேற்று இயக்குநர் ரோஹண ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

போதிய நிதியின்மையால் தேர்தலை நடத்துவது சிக்கலென அரசாங்கத்தால் கூறப்படுகிறது.

நிதி நெருக்கடியே உண்மையான காரணமெனில் அதற்கான நிதியைத் திரட்டுவதற்கான நடவடிக்கைகளில் இந்த வாரம் முதல் ஈடுபட நாம் தயார்.

நிதிப் பிரச்சினைகளைக் காரணம் காட்டி அரசாங்கம் பொதுமக்களின் உரிமைகளுக்கு பாதிப்பை ஏற்படுத்த அனுமதிக்கக்கூடாது.

அதிகாரப்பகிர்வு தொடர்பாகப் பேசுகின்ற ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, உள்ளூராட்சி மற்றும் மாகாணசபைத் தேர்தல்கள் இடம்பெறாமலிருப்பதற்கு வழிவகுக்கின்றார். இதற்கு நீதிமன்றத்தினூடாக எதிர்வரும் நாள்களில் நடவடிக்கை எடுப்போம் - என்றார். (ச-இ)

# தேர்தலைப் பிற்போடுகின்ற முயற்சிக்கு இடமளிக்கோம்

### வாசுதேவ நாணயக்கார எச்சரிக்கை

நாட்டின் நிதி அதிகாரம் நாடாளுமன்றம் வசமுள்ளது. தேர்தலைப் பிற்போடுவதற்கான ஜனாதிபதியின் முயற்சிக்கு நாடாளுமன்றத்தின் ஊடாக கடும் நடவடிக்கையை முன்னெடுப்போம்.

இவ்வாறு உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பில் வினவியபோது நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது :

தேர்தலை நடத்தாமல் ஆட்சியில் நீடிக்கவே ஜனாதிபதியும் பொதுஜன பெரமுன அரசாங்கமும் முயற்சிக்கின்றது. பொதுஜன பெரமுன தேர்தலுக்குத் தயாரில்லை என்ற காரணத்தால் நாட்டு மக்களின் ஜனநாயக உரிமையை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கேள்விக்குள்ளாக்கியுள்ளார்.

பொருளாதாரப் பாதிப்புக் காரணமாக நிதியில்லை என்று கூறி உள்ளூராட்சித் தேர்தலைப் பிற்போட இடமளித்தால் எதிர்வரும் காலங்களில் எந்தத் தேர்தலும் இடம்பெற வாய்ப்பில்லை. தேர்தலுக்கு நிதி ஒதுக்கமுடியாது என்று குறிப்பிடும் அதிகாரம் திறைசேரிக்கு இல்லை. இந்த ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் நாடாளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்டுள்ளது. உள்ளூராட்சிமன்றத் தேர்தலை பிற்போடும் ஜனாதிபதியின் முயற்சிக்கு நாடாளுமன்றத்தின் ஊடாக கடும் நடவடிக்கை எடுப்போம் - என்றார். (ச-இ)

**நாளை**

**23.02.2023**
**வியாழக்கிழமை**
**மாசி 11**

சுபநேரம் : 08.00 - 09.30
ராகுகாலம் : 02.00 - 03.30

**சதுர்த்தி விரதம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இளைஞர்கள் தள்ளிவிட்டதால் பொலிஸாரின் கை முறிந்தது!

வீதிப் பாதுகாப்பு பொலிஸாரின் சமிக்ஞையை (நிறுத்தல் உத்தரவை) மதிக்காது, பொலிஸ் அதிகாரியை இளைஞர்கள் தள்ளிவிட்டதில் அந்தப் பொலிஸ் அதிகாரியின் கை முறிந்தது. இந்தச் சம்பவம் பருத்தித்துறையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளது.

தலைக்கவசம் அணியாமல் ஒரு மோட்டார் சைக்கிளில் மூன்று இளைஞர்கள் வந்துள்ளனர். அவர்களை மோட்டார் சைக்கிளை நிறுத்துமாறு பொலிஸ் அதிகாரிகள் சமிக்ஞை மூலம் உத்தரவிட்டுள்ளனர். இதையடுத்து மோட்டார் சைக்கிளை நிறுத்துவதுபோன்று பாசாங்கு செய்துவிட்டு பொலிஸ் அதிகாரியைத் தள்ளிவிட்டுவிட்டு இளைஞர்கள் தப்பியோடியுள்ளனர். அவர்கள் தள்ளிவிட்டதிலேயே பொலிஸ் அதிகாரியின் கை முறிந்துள்ளது. இதையடுத்து அவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். (அ-ம-ஒ-5)


## AFTER A/L

**Direct Offer**

New batches are starting with special offers

**Diploma in Information Technology & Diploma in Office Automation**

Improve your understanding of both written & spoken English

**ENGLISH IELTS**

Special payment offers for more info

CHER
COLLEGE OF HIGHER EDUCATIONS AND RESEARCHES

No.131, Manipay Road, Jaffna.
021 221 0604
077 800 5204



## விற்பனைக்கு

மீசாலை, சோலை அம்மன் கோவிலை அண்மித்த பகுதியில் கவர்ச்சிகரமான இரண்டு புதிய வீடுகள் விற்பனைக்குண்டு.

- இரண்டு அறைகள், ஒரு Hall, Out Hall, Attached Bathroom உடனான 1 பரப்புக் காணியில் அமைந்த 27 அடி வீடு.
- இரண்டு அறைகள், ஒரு Hall, Attached Bathroom உடன் 1 பரப்புக்காணியில் அமைந்த 27 அடி வீடு.

**076 400 3059** (cr 39260) / 4,6


## நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்புத் துறை அமைச்சு
## நகர அபிவிருத்தி அதிகார சபை

# கேள்வி அறிவித்தல்

**யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம் பஸ் நிலையத்தில் அமைந்துள்ள கடைகளை வாடகை அடிப்படையில் (ஐந்து) 05 ஆண்டுகளிற்கு குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விக் கோரல்**

**ஒப்பந்த இலக்கம்: PD/UDA / RTB / Shops / Jaffna / 007 / 2023**

யாழ்ப்பாணம், காங்கேசன்துறை வீதி யாழ்ப்பாணம் பஸ் நிலையத்தில் அமைந்துள்ள பின்வரும் எட்டு (08) க்டைகளை ஐந்து (05) ஆண்டுகளுக்கு மாத வாடகை அடிப்படையில் வழங்குவதற்காக நகர அபிவிருத்தி அதிகார சபையின் பிராந்திய பெறுகைக்குழுத் (கீழ்மட்டம்) தலைவரினால் விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

**அட்டவணை 01**

| இலக்கம் | கடை இலக்கம் | தரை விஸ்தீரணம் (ச.அடி) | அடிப்படை பெறுமதி (முற்பணம்) ரூபாவில் | மாத வாடகை (ரூபாவில்) | விலை மனுப் பிணைத் தொகை (ரூபாவில்) |
|---|---|---|---|---|---|
| 01 | 02 | 304 | 524, 000.00 | 4,500.00 | 15,500.00 |
| 02 | 03 | 304 | 524, 000.00 | 4,500.00 | 15,500.00 |
| 03 | 04 | 304 | 484, 000.00 | 4,000.00 | 14,500.00 |
| 04 | 05 | 304 | 484, 000.00 | 4,000.00 | 14,500.00 |
| 05 | 06 | 304 | 484, 000.00 | 4,000.00 | 14,500.00 |
| 06 | 07 | 304 | 524, 000.00 | 4,500.00 | 15,500.00 |
| 07 | 08 | 304 | 524, 000.00 | 4,500.00 | 15,500.00 |
| 08 | 09 | 304 | 605,000.00 | 5,000.00 | 18,000.00 |

02. இக்கடைகள் மாத வாடகை அடிப்படையில் 05 ஆண்டுகளுக்கு வழங்கப்படும் வளமுள்ள கேள்விதாரர்களினால் சமர்ப்பிக்கப்புடும் ஆகக்கூடிய அடிப்படை விலைகளைக் கவனத்திற் கொண்டு. இவற்றை வழங்குவதற்கான தெரிவுகள் மேற்கொள்ளப்படும்.

03. குறித்த கேள்விதாரர் கடை யொன்றிற்கு மேற்பட்ட கேள்வி விலைகளைச் சமர்ப்பிக்க முடியாது

04. இதற்காக ஆர்வமுள்ள தரப்பினர், ஒவ்வொரு கடை அலகுக்கும் மேற்படி அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள அடிப்படைப் பெறுமானத்திற்கு மேல் கேள்வி விலைகளைச் சமர்ப்பித்தல் வேண்டும். சமர்ப்பிக்கப்பட்ட அடிப்படை விலைக்கு மேலதிகமாக மாதாந்த வாடகை மற்றும் அவற்றிற்காக வரிகளும் செலுத்தப்படல் வேண்டும். சித்திகரமான விலைமனுதாரரினால் செலுத்தப்பட்ட அடிப்படை பெறுமதியானது மீளளிக்கப்படாத தொகையாகும்.

05. 2023 பெப்ரவரி 20 முதல் 2023 மார்ச் 10 வரை மு.ப. 9.00 முதல் பி.ப. 2.30 வரை வார வேலை நாட்களில் மீளளிக்கப்படாத இலங்கை ரூபாவில் இரண்டாயிரம் மற்றும் அதற்கான வரிகளும் பத்தரமுல்ல, படிநிலை I, நகர அபிவிருத்தி அதிகார சபை 7ஆம் மாடி பெறுகை அலகிலிருந்து அல்லது யாழ்ப்பாணம் பிரதான வீதி, இல.20, இலுள்ள நகர அபிவிருத்தி அதிகார சபை, வட மாகாண அலுவலகத்தில் ஆர்வமுள்ள தரப்பினர் இதற்கான கேள்வி ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம். மேலும் கேள்வி ஆவணங்களை குறித்த காலப் பிரிவில் இலவசமாகப் பரிசீலனை செய்து கொள்ளலாம்.

06. கடைகளுக்கான ஒவ்வொரு கேள்வி ஆவணங்களுடனும், மேற்படி அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள விலைமனுப் பிணையமொன்று, யாழ்ப்பாணம், பிரதான வீதி இல. 20 இல் உள்ள நகர அபிவிருத்தி அதிகார சபையின், நிதிப் பிரிவில் ரொக்கப்பணமாக செலுத்திப் பெற்றுக்கொள்ளும் பற்றுச்சீட்டின் மூலப் பிரதி சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

07. 2023 மார்ச் 13 அன்று மு.ப. 11.00 இற்கு, யாழ்ப்பாணம், பிரதான வீதி, இல. 20 இல் அமைந்துள்ள நகர அபிவிருத்தி அதிகார சபையின் வட மாகாண அலுவலகத்தில் கேள்விகள், மூடப்பட்டு உடனடியாகவே திறக்கப்படும். அவ்வேளையில் கேள்விதாரர் அல்லது அவரின் அங்கீகாரம் பெற்ற பிரதிநிதியொருவர் சமுகளித்திருக்கலாம்.

08. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள், நகர அபிவிருத்தி அதிகார சபையினால் வழங்கப்படும் அலுவலக கேள்விப்படிவங்களில் இதற்கான கேள்வி விலைகளைச் சமர்ப்பித்தல் வேண்டுமென்பதுடன் ஏனைய ஆவணங்களில் சமர்ப்பிக்கப்படும் கேள்வி விலைகள் நிராகரிக்கப்படும்.

09. கேள்வி ஆவணங்களில் இதற்கான சமர்ப்பித்தல் செயல்முறைகள் குறிப்பிடப்பட்டுள்ளன.

10. பத்தரமுல்ல, படிநிலை I, செத்சிரிபாய, 7ஆம் மாடி, நகர அபிவிருத்தி அதிகார சபை (பெறுகை) பிரதிப்பணிப்பாளரிடம் தொலைபேசி: 011-3049008 மற்றும் 011-2875916-20 நீடிப்பு 2681 மூலம் அல்லது அலுவலக நேரங்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை வட மாகாண அலுவலகம் நகர அபிவிருத்தி அதிகார சபையின் தொலைபேசி 021-2213519 மற்றும் 021-2223269 மூலம் மேலதிக விபரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

**இறைவரி கேள்விச் சபை (கீழ் மட்டம்)**
**நகர அபிவிருத்தி அதிகார சபை,**
**6ஆம் மாடி, செத்சிரிபாய,**
**படி நிலை - 1, பத்தரமுல்ல.**

(cr.39292) (2.6)

## கண்ணீர் அஞ்சலி



தோற்றம் 17 - 09 - 1942

மறைவு 20 - 02 - 2023

கலட்டி எச்சாட்டி மகாமாரியம்பாள் தேவஸ்தான பஞ்சகர்த்தா உறுப்பினரும் மற்றும் ஆலய பரிபாலன சபை தலைவரும் ஆகிய திரு. **இலங்கநாயகம்** அவர்களின் அன்பு மனைவி

**திருமதி**
**ஞானேஸ்வரி இலங்கநாயகம்**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**பிரிவுத் துயரில்**
**கலட்டி எச்சாட்டி மகாமாரியம்பாள் தேவஸ்தான நிர்வாக சபையினர் மற்றும் இளைஞர் கழகம்.**

## மரண அறிவித்தல்



**ஞானேஸ்வரி இலங்கைநாயகம்**

**அன்னை மடியில்** 17.09.1942
**ஆண்டவன் அடியில்** 20.02.2023

திருநெல்வேலி தெற்கு வளாக வீதியை வதிவிடமாகக் கொண்ட ஞானேஸ்வரி இலங்கைநாயகம் நேற்றுமுன்தினம் (20.02.2023) திங்கட்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை தங்கரத்தினம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற இராசரத்தினம் பாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகளும், இலங்கைநாயகம் (Retired O.I.C,Prison Department) அவர்களின் பாசமிகு மனைவியும், நாகலதா (ஆசிரியர், கொ / சைவ மங்கையர் வித்தியாலயம்), இலங்காதரன் (Electrical Engineer, Canada) ஆகியோரின் அன்புத் தாயாரும், தயாபரன், தாரணி ஆகியோரின் அன்பு மாமியாரும், சாயி ஸ்ருதி, சாயி ஹரிணி ஆகியோரின் அன்பு அம்மம்மாவும், இலக்ஷன், தீபிகா ஆகியோரின் அன்பு அப்பம்மாவும், காலஞ்சென்ற நித்தியானந்தன் மற்றும் ராஜேஸ்வரி, ஊர்மிளாதேவி , பத்மலோஷினி, சச்சிதானந்தம் (France), பிரம்மானந்தம் (France) ஆகியோரின் அன்புச்சகோதரியும் ஆவார்

அன்னாரின் ஈமக்கிரியைகள் நாளை (23.02.2023) வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் கொக்குவில் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்**
**குடும்பத்தினர்**

(cs23615) (2.6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதன் பொய்கை



"தினைத்துணையாங் குற்றம் வரினும் பனைத்துணையாக் கொள்வர் பழிநாணு வார்." -வள்ளுவர்



பிரியா இராமநாதன்



# அழிவுப் பாதையில்

# தமிழ் காத்த பனை

அழிவின் விளிம்பில் இருக்கும் தமிழர்களின் பாரம்பரியச் சொத்துக்களில் ஒன்றுதான் பனைமரம். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்தோன்றிய மூத்த மொழி தமிழ்மொழி என நாம் பெருமைப்பட்டுக்கொள்வதற்கான முக்கியமான சாட்சியாக விளங்குவது பனை. ஓலைச் சுவடிகளிலிருந்து கிடைத்த வரலாற்றுத் தகவல்கள்தான். பனைமரம் தமிழர்களின் வாழ்வியலோடு பின்னிப் பிணைந்தது என்பதனை தொல்காப்பியம், திருக்குறள், திருவாசகம், தேவாரம், திவ்யபிரபந்தங்கள் உட்பட பல சங்க இலக்கியங்களிலும் காணக்கிடைக்கிறது. பனை ஓலைகளில் எழுதப்பட்டதால்தான் இந்த இலக்கியங்களும், தமிழ் எழுத்துக்களும் அழியாமல் தப்பிப்பிழைத்தன எனக் கூறினாலும் தகும். ஓலைச்சுவடிகள் செய்ய பனைமர ஓலைகள் பொதுவாகப் பயன்படுத்தப்பட்டிருந்தாலும், தமிழகத்தில், குறிப்பாக மூன்று வகை பனை மரங்களான தாளைப்பனை, கூந்தல் பனை, இலாந்தர் பனை போன்ற மரங்களின் ஓலைகளையே 'ஓலைச் சுவடிகள்' செய்ய பயன்படுத்தியுள்ளனர் என வரலாறு கூறுகின்றது.



உலக நாகரீகங்களில், எழுதுவதற்காக ஆமை ஓடுகள் மற்றும் பல்வேறு விலங்குகளின் தோல்கள் பயன்படுத்தப்பட்டபோதிலும் தமிழர்கள்தான் இதனை எளிமைப்படுத்தி பனை ஓலைகளில் எழுதத் தொடங்கினர். அச்சுக் கருவி கண்டுபிடிக்கப்படும் வரையில் இந்த முறை தொடர்ந்ததென்றால் மிகையில்லை. திருக்குறளில் 'பயன்மரம்' எனக் குறிப்பிடப்பட்டுள்ள மூன்று மரங்களில் பனை மரமும் ஒன்று.

'கிணற்றைச் சுற்றி பத்து பனைமரம் நின்றால் இறுதிவரை அந்தக் கிணறு வற்றவே வற்றாது. அப்படி வற்றவிடாத அந்தப் பனைமரம் கழுத்து முறிந்து சாகிறது என்றால் அந்த நிலம் பாலை வனமாக மாறிக் கொண்டிருக்கிறது என்பதைப் புரிந்துகொள்' என்பது நம்மாழ்வார் கூற்று. ஒரு சமூகத்தில் பயன்படுத்தப்படும் பொருள்களை வைத்து அந்தச்சமூகத்தைக் கணிப்பது 'புழங்குபொருள் பண்பாடு' எனப்படும். அந்தவகையில் தாலி முதல் பல்வேறு அன்றாட தேவைக்குரிய மற்றும் உணவுப் பொருள்கள்வரை பனையின் பயன்பாடு தொன்றுதொட்டு தமிழர்களோடு நெருங்கிய தொடர்புகொண்டது. (பனை ஓலையிலிருந்து செய்யப்பட்ட தாலி 'தாலிப்பனை' எனக் குறிப்பிடப்பட்டுள்ளது இலக்கியங்களில்) பனை மரத்தினை தலவிருட்சமாகக் கொண்ட பல கோவில்கள் தமிழகத்தில் உள்ளன. தமிழகத்தில் மட்டுமன்றி இலங்கையிலும் பனையின் பெயரை அடியடையாகக்கொண்டு பல ஊர்களின் பெயர்கள் உண்டு என்பதும் குறிப்பிடத்தக்கது.

ஒற்றைப் பனைமரம் எண்ணூறுக்கும் மேற்பட்ட மருத்துவ பயன்களைக்கொண்டு விளங்குகிறது யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தங்கத் தாத்தா என அழைக்கப்படும் சோம சுந்தரப்புலவர் எழுதிய 'தாலவிலாசம்' என்னும் இலக்கியம்.

### அழிவை நோக்கி...

மனிதர்கள் மட்டுமன்றி வெளவால், புனுகுப்பூனை, மரநாய், நாகணவாய், மைனா, தூக்கணாங்குருவி போன்ற உயிரினங்களும்கூட பனை மரத்தைச் சார்ந்து வாழக் கூடியவை. அண்மைக்காலத்தில் இடம்பெற்றுவரும் பனை மரத்தின் அழிவு என்பது இந்த உயிரினங்களின் அழிவாகவும் பார்க்கப்படவேண்டியவொன்று. ஒருகாலத்தில் ஐந்துவகை நிலங்களிலும் நிலத்துக்கு ஏற்றவாறு மக்கள் வாழ்ந்துவந்தனர். கடலும் கடல்சார்ந்த பிரதேசங்களிலும் வாழ்ந்துவந்த நெய்தல் நில மக்கள் தற்போது வாழ்வாதார மாற்றத்தினால் வேறு இடங்களுக்கு இடம்பெயர்ந்துவிட, தற்போதெல்லாம் கடற்கரை என்பது பெரியபெரிய பங்களாக்கள், சொகுசு தொடர்மாடிகள் போன்றவற்றை அமைத்துக்கொண்டு பணக்காரர்கள் வசிக்கக்கூடிய இடமாகவும், சுற்றுலாவுக்கான இடமாகவும், நட்சத்திர ஹோட்டல்களைக் கொண்ட இடமாகவும் மாறிவிட்டதென்றால் மிகையில்லை. இந்த மாற்றமென்பதும் பனையின் அழிவுக்கு ஒரு காரணம், ஏனெனில் தற்போதெல்லாம் கடற்கரைகளை அழகுபடுத்த அயல் தாவரங்களான 'பாம் ட்ரீக்களே' அதிகம் விரும்பப்படுகின்றன. இதனால் காலங்காலமாக நம் கடற்கரைகளை தன்னுடைய சல்லி வேர்களால் பாதுகாத்து மண்ணரிப்பு, கடல்கோள் போன்றவற்றை தடுத்து நிறுத்திய பனைமரங்கள் வேண்டப்படாத ஒன்றாகி விட்டன.

உண்மையில், ஆங்கிலேயரின் வருகையுடனேயே பனையின் அழிவும் ஆரம்பித்து விட்டது என்றுதான் கூற வேண்டும். சங்ககாலம் தொட்டு தமிழர்களின் இனிப்புச் சுவை என்கிறவொன்றுக்கு பயன்பட்டது 'கருப்பங்கட்டி' எனப்படும் பனங்கருப்பட்டியே. வெள்ளை சர்க்கரை என்கிற உணவு ஆங்கிலேயரால் நம் சமூகத்தினுள் புகுத்தப்பட பனங்கருப்பட்டியின் பாவனை மெல்லமெல்ல அழித்தொழிக்கப்பட்டது. ஆனால், இன்றும் பல மேலைத்தேய நாடுகளில் பனங்கருப்பட்டி, பனங்கற்கண்டு போன்றவற்றையே தமது உணவுப்பட்டியலில் பலர் வைத்துள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. எப்படி மிளகாயை நம்மிடம் தள்ளிவிட்டுவிட்டு ஆரோக்கியம் நிறைந்த மிளகை அபகரித்துக் கொண்டார்களோ அப்படிதான் இதுவும்.

### மீட்சி தேவை

கிராமப்புற பொருளாதாரத்தை மேம்படுத்த பனைமரங்களை மீட்டெடுக்கவேண்டிய அவசியம் தற்போது எம்மிடம் உள்ளது. முன்பெல்லாம், பாய், விசிறி, பெட்டிகள், தூரிகைகள், பல அலங்காரப்பொருள்கள் போன்றவை இந்தப் பனை மரத்திலிருந்து உருவாக்கப்பட்டன. இது கிராமப்புறத்தில் உள்ள பலருக்கும் ஓர் வாழ்வாதாரமாகவும் இருந்தது.

ஆனால், இப்போதெல்லாம் நிலைமை தலைகீழ். சுமார் நூறு அடிகளுக்கு மேல் வளர்ந்துள்ள பனையில் ஏறுவதென்பது அவ்வளவு எளிதானதல்ல. இந்தத் தொழில் நவீன மயப்படுத்தப்படாமல் இன்னும் பாரம்பரிய முறையில் நகர்ந்து கொண்டிருப்பதும் பனைப் பொருளாதாரத்தின் வீழ்ச்சிக்கு காரணமாகவும் அமைகிறது.

உலகில் நூற்றி எட்டு நாடுகளில் பனை மரங்களும் அது சார்ந்த தொழிலும் முன்னிலை வகித்தாலும் தமிழகத்திலும், இலங்கையிலும் பனைத்தொழில், குறிப்பிட்ட ஒரு சமூகத்துக்கு மாத்திரமே உரித்தானது என்ற எண்ணமும் பனையின் வீழ்ச்சிக்கான காரணம்.

பனைமரம் என்பது நட்டதும் உடனடியாக பயன் தரக்கூடியதல்ல. அதற்கு குறைந்தது இருபது தொடக்கம் இருபத்தைந்து ஆண்டுகள் காத்திருக்கவேண்டும். ஆகவே, இன்றைய தலைமுறையில் நட்டதும் குறைந்தது ஆறு மாதங்களில் பலன் தந்துவிடவேண்டும் என்கிற எதிர்பார்ப்பும் பனையின் வளர்ச்சியில் மக்கள் ஈடுபாடுகாட்டாமைக்கு ஓர் காரணம் எனலாம். பூலோகத்தின் 'கற்பகத்தரு' எனப்படும் பனை மரம் முழுமையாக வளர இருபது ஆண்டுகாலம் தேவைப்படும், பதினைந்து ஆண்டுகளுக்குப் பின்னரே ஒரு பனை ஆண் பனையா? பெண் பனையா? என்பதை தெரிந்துகொள்ள முடியும். பெண் பனையினை 'பருவப் பனை' என்றும் ஆண் பனையினை 'அழகுப் பனை' என்றும் குறிப்பிடுகின்றனர். சுமார் நூற்றி இருபது அடிவரை வளரக்கூடிய இம்மரங்களின் நுனி முதல் அடிவரை ஆயிரத்துக்கும் மேற்பட்ட பயன்களைத் தரக்கூடியது.

**'தினைத்துணை நன்றி செயினும் பனைத் துணையாகக் கொள்வர் பயன் தெரி வார்'** என்பது திருக்குறள். ஆனால் நமக்கெல்லாம் நம் மொழியைக் கட்டிக்காத்து அருளிய பனை மரத்தினை காக்க மறந்து, நன்றி மறந்த இனமாக மாறிவிட்டோமா தமிழர்களாகிய நாம்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



■ காயத்திரி

# மக்கள் வாழ்வில் நாட்டார் இலக்கியம்

**இலக்கியம் என்பது மக்கள் வாழ்க்கையோடு தொடர்புடையது. மனித வாழ்க்கையிலிருந்து மலர்வது. ஏட்டிலக்கியம் அறிமுகப்படுத்தப்படாத காலகட்டத்திலே ஆதிகால பாமர மனிதன் இயற்கை ஒலி இரசனையால் தூண்டப்பெற்று தானும் அதைப்போலக் குரல் எழுப்பத் தொடங்கினான். மொழியும் அவனுக்குத் துணை போகவே அவனது வாயிலிருந்து பாடலடிகள் பிறக்கத் தொடங்கின. அவையே பிற்காலத்தில் நாட்டார் பாடல்களாக வளர்ந்தன.**

இத்தகைய நாட்டார் இலக்கியங்களையும் இரு பிரிவுகளாகப் பிரிக்கமுடியும்.
ஒன்று பழங்குடி மக்களிடையே பேணப்பட்டு வந்த மரபுவழி வாய்மொழிப்பாடல்கள். இன்னொன்று சிறிது நாகரீகமடைந்த மக்களிடையே வழங்கி வந்த நாட்டார் பாடல்கள். இந்த இருவகை நாட்டார் இலக்கியங்களும் மனித வாழ்வின் அன்றாட நிகழ்ச்சிகளையே பிரதிமைப்படுத்துகின்றன. மனிதனது அழகுணர்ச்சியைத் தூண்டும் சாதனங்களாக இயல் (இலக்கியம்), நாடகம் (ஆடல்) என்பன முக்கியம் பெறுகின்றன.
இந்த மூன்று துறைசார் கலை அம்சங்களையும் கொண்டவையாக நாட்டார் பாடல்கள் விளங்குகின்றன.

### தோற்றமும் பன்முகமும்

ஏட்டறிவு, எழுத்தறிவு இல்லா மக்களுடைய வாழ்வில் குழந்தை பிறப்பது முதல் இறப்பு வரையும் இப்பாடல்கள் பின்னிப் பிணைந்துள்ளன. குழந்தை பிரசவமாகும் போது மருத்துவிச்சி வாழ்த்துப் பாடினாள். பிறந்த குழந்தைக்கு தாயவள் தாலாட்டுப் பாடினாள். பிள்ளைக்கு அமுதூட்டும் போதும் விளையாட்டுக் காட்டும்போதும், கதை சொல்லும் போதும் பாடல்களைப் பாடினார்கள். தொழிலாளர் தொழில் செய்யும் போதும் பாடல்களைப் பாடித் தொழில் செய்தனர். பொழுது போக்குக்காக கும்மி, கோலாட்டம், ஊஞ்சல், வசந்தன், நாடகப் பாடல்களும் பாடிக் களித்தனர். மனிதன் இறக்கும்போது ஒப்பாரி பாடினர். இவைதவிர கடவுள் வழிபாடு, விழாக்கள், கொண்டாட்டங்கள், பண்டிகைகள் சடங்குகளின் போதும் பாட்டுக்கள் பாடினர். பழைய கதைகளை நாடகமாக்கி ஆடும்போது நாடகப் பாடல்களாகத் தோன்றின. இவ்வாறு நாட்டார் பாடல்கள் பல்வேறு சந்தர்ப்பங்களில், பல்வேறு வகையில், பல்சுவைப் பாடல்களாக உருவெடுத்தன.
இவை இசை கலந்த இனிய பாடல்களாக கேட்போர் செவிக்கும் இதயத்துக்கும் இன்பமளிக்க பிரதிபலிக்கும் தன்மை வாய்ந்தவை. மக்கள் வாழ்வின் உள்ளக் கிளர்ச்சிகள், கதைகள், நகைச்சுவைகள், உவமைகள் யாவும் செறிந்த தன்மையை இயற்கை அழகை நாட்டார் பாடலில் நாம் அவதானிக்கலாம்.
குழந்தை பிறந்தவுடன் மருத்துவச்சி **'அயலும் புடையும் வாழ வேண்டும் அன்னமும் சுற்றமும் வாழவேண்டும்....'** என்றவாறாகப் பாடுகின்றாள். அதாவது: குழந்தை பிறப்பது பெற்றோர்க்கு மாத்திரமல்ல முழுச்சமூகத்துக்குமே மகிழ்ச்சியைத்தரவேண்டும் என வாழ்த்துவதையும், **'ஆராரோ ஆரிவரோ.........ஆச்சி அடிச்சாளோ அமுதூட்டும் கையாலே, அண்ணன் அடிச்சானோ அரைஞாண் கயிற்றாலே ....'** என தாயவள் குழந்தையைத் தாலாட்டும் வேளையிலும் தாயன்பு பிரதிபலிப்பதையும் நாம் காணலாம்.
இந்த நாட்டார்பாடல்களே இயற்றமிழ்க் கவிதைகளையும் இசைத்தமிழ்க் கவிதைகளாக்கின எனின் மிகையாகாது.
ஆனால், நாகரீகமயப்பட்ட வாழ்வில் நாட்டு மக்களின் வாழ்க்கைச் சூழ்நிலையும் விரைவாக மாறிவிடுவதால் நாட்டார் இலக்கியம் புதிதாக வளர்ச்சி அடையாதது மட்டுமன்றி மறைந்து கொண்டு போகவும் தொடங்கியது.
அண்மைக்காலத்தில் கலைத் துறையில் ஏற்பட்ட மறுமலர்ச்சி நாட்டார் இலக்கியத்தின் தேவையையும் மதிப்பையும் உயர்த்தியிருப்பதால் இத்துறை புதுவளர்ச்சி பெற்றுய்வதற்கு வாய்ப்புண்டு.



## தீண்டல்

இழைந்தது
வாழ்க்கை என்றாலும்
தழைத்தது
இயற்கை மட்டுமே.

நகர வீதிகளில்
நசுங்கிப் போனவர்களுக்குத்
தெரியும்
தூசுகள் பறந்தாலும்
கிராமத்தின்
மண்ணின் மணம்
பெண்ணின் தீண்டலைவிட
மென்மையானது என்று.

மாடமாளிகைகளில்
தொங்கும்
அலங்கார விளக்குகளுக்குத்
தெரியாது
இல்லத்திற்குள்ளும்
மனிதர்கள்
எரிந்து கொண்டிருக்கிறார்கள்
என்று.

விளக்கே இல்லாத
குடிசைகளுக்குத் தெரியும்
உள்ளே
உலா வருபவை
அணையா விளக்குகள்
என்று.
அங்கே
புன்னகையில்
பூச்சுகள்
வீசும்.
இங்கே
இழப்பதற்கு ஒன்றும்
இல்லாவிட்டாலும்
புன்னகைப் பூக்கள்
பூக்கும்.
அவர்கள்
வெள்ளம்
சூழும்போது மட்டும்
உள்ளம் இரங்கும்.

வெள்ளம்
வந்தாலும் வராவிட்டாலும்
எப்பொழுதும்
இவர்களின்
சுரங்கள் நீண்டே
இருக்கும்
ஆண்டுகள்
பத்தானாலும்
அக்கம் பக்கத்தினரோடு
ஒட்டுமில்லை
உறவுமில்லை.
பழகியோர்
பழகாதோர்
வேறுபாடின்றி
நொடிப்பொழுதில்
இதயத்தில்
அமர்வர்.

சுற்றுச்சூழல் பாதிப்பால்
நகரங்கள்
நரகங்கள்
ஆகலாம்.

இயற்கையின்
வரத்தால்
கிராமங்கள்
மகரந்தங்களை மட்டும்
வீசிக்கொண்டே இருக்கும்.

எழிலன்.

## தமிழ் மொழி



ஆதியில் மறந்த மொழி
கம்பன் கவி வடித்த மொழி
எம் பாரதி கர்ஜித்த மொழி
என் உடல் சாம்பலானாலும்
சாம்பலோடு பூத்து கமிழும்
வீரம் முழங்கும்
என் தாய்மொழி
தமிழ்மொழி
உளியால் செதுக்கினாலும்
வலியை தாங்குவோமே தவிர
மொழியை விட்டுக்கொடுக்க
மாட்டோம்
எம் இறுதி மூச்சு வரை...

கானிலா அபராஜிதன்
யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## துருக்கியில் உயிரிழந்தோருக்கு மன்னாரில் அஞ்சலி

துருக்கி, சிரியாவில் ஏற்பட்ட நிலநடுக்கத்தில் உயிரிழந்தவர்களுக்கு மன்னாரின் பிரதான பேருந்து நிலையத் துக்கு முன்பாக அஞ் சலி நிகழ்வு நேற்று முன்தினம் திங்கட்கி ழமை இடம்பெற்றது. "மெசிடோ நிறுவனத் தின் மன்னார் மாவட்ட இணைப்பாளர் யாட் சன் பிகிராடோ தலை மையில் நடைபெற்ற நிகழ்வில், சர்வமதத் தலைவர்கள் உட்படப் பலதரப்பட்ட அமைப் புக்களின் பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் அனைவரும் கலந்து கொண்டு சுடரேற்றி மலர்தூவி அஞ்சலி செலுத்தினர். (எ-14-60)

## கண்ணீர் அஞ்சலி

யாழ் போதனா வைத்தியசாலையில் தாதிய உத்தியோகத்தராக கடமையாற்றும் **திருமதி இராஜசேகரம் யசிதா** அவர்களின் அன்புத் தந்தை

**மாதவர் தங்கவேலு**

அவர்கள் காலமானதையிட்டு துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக் கின்றோம்.

**தாதியர் நலன்புரிச் சங்கம்**
**போதனா வைத்தியசாலை,**
**யாழ்ப்பாணம்.**

(CS 23615)1-6

## மரண அறிவித்தல்



தோற்றம் 07 . 04 . 1950

மறைவு 20 . 02 . 2023

**இராசையா சற்குணநாதன் (குணம்)**

தையிட்டி கலைமகள் வீதியை பிறப்பிடமாகவும் உடுவில் மற்றும் உரும்பிராய் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட இராசையா சற்குணநாதன் (குணம்) கடந்த (20.02.2023) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசையா அன்னபூரணம் தம்பதியரின் அன்பு மகனும், நாகமுத்து நாகம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், குணமணியின் அன்புக் கணவரும், மதுரா, ரம்ஜா ஆகியோரின் பாசமிகு தந்தையும், சிவகுமார், ஜெகதீஸ் ஆகியோரின் அன்பு மாமனாரும், சறோஜினிதேவி, காலஞ்சென்ற சாந்தசீலன் மற்றும் தியாகராஜா, திலகராஜா, சகுந்தலாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற சந்திரசேகரம் மற்றும் செல்வி, கௌசிகா, செல்வராசா ஆகியோரின் மைத்துனரும், அனுஜா, சந்தோஷ், அஸ்வினி, கரோஜினி, திலக்சி, அங்கயன் ஆகியோரின் பெரியப்பாவும், பவித்திரா, கவிக்கா ஆகியோரின் அன்பு மாமாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (23.02.2023) வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, உரும்பிராய் இளங்காடு இந்து மயானத்தில் தகனக்கிரியைகள் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**ஞானவைரவர் வீதி,**
**உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய்.**
**077 22 73 142, 077 833 8309**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(CS 23620)1-6

## மரண அறிவித்தல்



தோற்றம் 15 . 04 . 1959

மறைவு 20 . 02 . 2023

**கனகராசா பிரேமச்சந்திரன்**

ஊரிக்காட்டை பிறப்பிடமாகவும், ஓட்டுமடம் வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட கனகராசா பிரேமச்சந்திரன் நேற்றுமுன்தினம் (20.02.2023) திங்கட்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (23.02.2023) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பிற்பகல் 3.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.


**ஓட்டுமடம் வீதி,**
**யாழ்ப்பாணம்.**
**076 179 0490**

**தகவல்:**
**மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,**
**சகோதரர்கள், பெறாமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்.**

(cs. 23608) (2.6)

## மரண அறிவித்தல்

**இராமலிங்கம் புவனேஸ்வரன் (சிவலிங்கம்)**



**தோற்றம் 17.07.1942**

**மறைவு 21.02.2023**

கைதடி வடக்கை பிறப்பிடமாகவும் வதிவிட மாகவும் கொண்ட இராமலிங்கம் புவனேஸ்வரன் நேற்று (21.02.2023) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார். அன்னார் காலஞ்சென்ற இராமலிங்கம் மாணிக்கம் தம்பதியரின் அன்புப் புதல் வனும், காலஞ்சென்ற தம்பையா சின்னத் தங்கம் ஆகியோரின் அன்பு மருமகனும், சரஸ்வதியின் அன்புக் கணவரும், கௌசலா (ஆசிரியை யா/நாவற்குழி மகா வித்தியாலயம்), சிவரூபன் (லண்டன்) ஜெயரூபி (முன்பள்ளி ஆசிரியை), சிவரூபி (நீதிமன்ற உத்தியோகத்தர்), பவரூபன் (நீதிமன்ற உத்தியோகத்தர்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், அனுச்செல்வன், துஷ்யந்தி, செந்தூரன், கோகுலன் ஆகியோரின் அன்பு மாமனாரும், கஷ்வினியா, அட்ஷயன், சபிர்ஷன், மிதுர்ஷன், பதுர்ஷனன், அட்ஷயா ஆகியோரின் பாசமிகு பேரனும், காலஞ்சென்ற பூமணியின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற சின்னத்துரை மற்றும் சிவப்பிரகாசம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (23.02.2023) வியாழக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கைதடி வடக்கு தச்சன்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**கைதடி வடக்கு,**
**கைதடி.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(CS 23614)

## மரண அறிவித்தல்



தோற்றம் 20 . 06 . 1935

மறைவு 19 . 02 . 2023

**முத்தையா சின்னத்தம்பி**

யாழ். கொற்றாவத்தையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட முத்தையா சின்னத்தம்பி அவர்கள் கடந்த (19.02.2023) ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னார், காலஞ்சென்ற முத்தையா, பத்தினி தம்பதிகளின் பாசமிகு மகனும், காலஞ்சென்ற கிருஷ்ணபிள்ளை, தங்கம்மா தம்பதிகளின் மருமகனும், இராஜேஷ்வரி அவர்களின் அன்புக் கணவரும், இராமேஸ் (ஜேர்மனி), நவநீதன்(லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், சாமினி, எவலின் ஆகியோரின் மாமனாரும், சங்கீத், சஞ்சய், அபிஷா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை நாளை (23.02.2023) வியாழக்கிழமை மு.ப 10.00 மணியளவில் நடைபெற்று பின்னர் ஊரணி மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல்:**
**மகன் - நவநீதன்**

(CS 23623) 1-6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகிலத்துக்கு இளைஞர் சாரணிய ஒளியைப் பரப்பிய சாரண தந்தை பேடன் பவல் பிரபுவின் 166ஆவது பிறந்ததினம் இன்றாகும். இதை முன்னிட்டு இந்தக் கட்டுரை பிரசுரமாகின்றது.

■ ஆயுள்வேத வைத்தியர் இ.தில்லைவாசன்
ஜனாதிபதி சாரணன்

# பேடன் பவல்
# சக்திமிகு சாரணியத்தின் பிதா!



**“என்னால் கூடுமானவரை எனது சமயத்துக்கும், தேசத்துக்கும் எனது கடமைகளைச் செய்வேன் என்றும், எந்தக்காலத்திலும் பிறருக்கு உதவி புரிவேன் என்றும் சாரண விதிகளுக்கு அமைந்து பணிந்து நடப்பேன் என்றும் மொழிந்ததுடன், சாரண பிரமாணத்தையும் பத்து சாரண விதிகளையும் இளைஞர்களுக்கு வழங்கி இறை நம்பிக்கையுடனும் தேசப்பற்றுடனும் பிறருக்கு உதவிபுரிந்து ஒழுக்கம் உள்ளவர்களாக சமூகத்தில் உயர்வுடன் வாழ வழி அமைத்த பேடன் பவல் பிரபுவின் வாழ்க்கை வரலாற்றை அகிலத்து மக்கள் அனைவரும் அறிந்திருப்பது அவசியமாகும்.**

இங்கிலாந்தின் லண்டன் நகரில் 1857ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 22ஆம் திகதி பேடன் பவல் பிறந்தார். 19 வயதில் கல்லூரியில் பட்டம் பெற்று இராணுவத்தில் இணைந்தார். குதிரைப்படை உபதளபதியாக இந்தியாவுக்குச் சென்றார். கிரிமியன் யுத்தத்தில் பெரும் புகழ்பெற்று 26 வயதில் தளபதியானார். 30 வயதில் ஆபிரிக்காவிலே கொடிய மிலேச்ச மடோபினியினருக்கு எதிராகவும் அஸாந்தியருக்கு எதிராகவும் ஸீலு சாதியினருக்கு எதிராகவும் பெரும் யுத்தங்களை நடத்தினார். இதையடுத்து அவரின் திறமையைப் பார்த்த சுதேசிகள் அவரை. 'இம்பீசா' என்று பெயரிட்டு அழைத்தனர். இதன் பொருள் 'ஒரு போதும் துயில் கொள்ளாத ஓநாய்' என்பதாகும்.

1899ஆம் ஆண்டு தென்னாபிரிக்காவின் மேப்பிங் நகரத்தை இங்கிலாந்திடமிருந்து திறான்ஸ்வால் குடியரசினர் மீட்டுவிடாத வகையில் அதி சிறந்த போர் வியூகங்களை பேடன் பவல் கைக்கொண்டார். அதன் பின்னர் பவலுக்கு உதவிக்குச் சென்ற படையினரால் மேப்பிங் நகரம் காப்பாற்றப்பட்டது. இதையடுத்து பெரும் வரவேற்புடன் இங்கிலாந்துக்குத் திரும்பினார் பேடன். மேஜர் ஜெனரல் பதவிக்கு உயர்த்தப்பட்டார். இதன் பின்னர் தான் சாரணியம் தொடர்பான உந்துதலும் சிந்தனையும் அவரிடம் ஏற்பட்டது.

### சாரணியப் பரிசோதனை

பொன் விழாக் காணும் வயதில், இந்தச் சாரண கொள்கையை பரிசோதிப்பதற்காக 1907ஆம் ஆண்டு இங்கிலாந்து கால்வாயில் அமைந்துள்ள பிரவுன்ஸி தீவிலே இருபது சாரணர்களுடன் வெட்டவெளிப் பாசறையை அமைத்து சிறப்பாக பயிற்சி அளித்தார். முதல் முதலாக சாரண ஒளியை தரணியில் பரவச்செய்தார். பெரும் வெற்றியை பாசறை வாசத்தில் கண்டார். 1908ஆம் ஆண்டு 51 வயதில் இளைஞர் சாரணியம் என்னும் நூலை சிறார்களுக்காக இரு வாரங்களுக்கு ஒரு பிரசுரமாக ஆறு பிரசுரங்களாக சித்திரங்களைத் தானே வரைந்து வெளியிட்டார். 1910ஆம் ஆண்டு சாரண வளர்ச்சியைக்கண்டு வருங்கால இளைஞர்களை ஒழுக்கம் உள்ள உத்தமர்களாக்குவதற்காக இராணுவத்தில் இருந்து விலகினார் பேடன் பவல். 1910ஆம் ஆண்டு கடற்சாரணர் பிரிவையும், பெண் சாரணர் பிரிவையும் ஆரம்பித்தார். முதலாவது பெண் சாரணியாக பேடன் பவலின் சகோதரி ஆக்னஸ் இணைந்தார்.

1912ஆம் ஆண்டில் சாரண இயக்கத்தை உலகமயமாக்குவதற்காக உலக நாடுகளுக்கான பயணங்களை மேற்கொள்ள ஆரம்பித்தபொழுது முதலாம் உலகப்போர் ஆரம்பித்ததால் அவரின் பயணம் தடைப்பட்டது. எனினும் இந்த ஆண்டில் இலங்கையில் மாத்தளை புனித தேவாலய வித்தியாலயத்தில், பிரான்ஸிஸ் வென்சன் என்பவரால் சாரணஒளி பரவ ஆரம்பித்தது. சாரண தந்தையின் 59ஆவது வயதில் 1916ஆம் ஆண்டு யாழ்ப்பாண மண்ணில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி, புனித பரியோவான் கல்லூரி, யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி, புனித பத்திரிசியார் கல்லூரி, யாழ்ப்பாணக் கல்லூரி ஆகிய ஐந்து கல்லூரிகளில் சாரணியம் பரவியது. இவ்வாண்டில் பேடன் பவல் ஆறரை வயது தொடக்கம் பதினொரு வயதினருக்கான குருளைச் சாரண பிரிவை ஆரம்பித்தார். 61 வயதில் 1918ஆம் ஆண்டு 18 வயது தொடக்கம் 24 வயதினருக்கான திரிசாரண பிரிவை ஆரம்பித்தார். இந்த ஆண்டில் இலங்கையில் கடற்சாரணர் பிரிவு ஆரம்பமானது.

இவ்வாறாக சாரணியம் என்ற அற்புதமான கொடையை உலகத்துக்கு உவந்தளித்த பேடன் பவலின் வழி தொடர்ந்து சாரணியத்தையும் அதன் பணிகளையும் அர்த்தமாக்குவோம். ■

---

# புதுக்குடியிருப்பு இஷானியா கலாமன்றத்தில் இடம்பெற்ற
# “மழலைகள் மகிழ்வூட்டல் விழா”



சிறுவர்களை மகிழ்ச்சிப்படுத்துவதும் அவர்கள் உளநல ஆரோக்கியத்தில் பங்குபெறுவதும் சமூகத்தில் எல்லோருக்குமான பொறுப்பாகும். போருக்குப் பின்னரான வன்னியின் சூழலில் பல்வேறு இடர்பாடுகளைச் சந்தித்து நிற்கும் சிறுவர்களையும், பொருளாதார நெருக்கடியில் சிக்கியுள்ள சிறுவர்களையும் உள ஆற்றுகைப்படுத்த இவ்விதமான நிகழ்வுகள் துணை செய்கின்றன.

ஈழத்தின் வன்னி புதுக்குடியிருப்பில் அமைந்துள்ள இஷானியா கலாமன்றத்தில் 'மழலைகள் மகிழ்வூட்டல் நிகழ்வு' கடந்த 12ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் பத்து மணிக்கு கலாமன்றத்தின் இயக்குநர் வை.கமலராஜா தலைமையில் ஆரம்பமானது.

நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக ஓய்வு நிலை பிரதிக்கல்விப்பணிப்பாளர் கலாநிதி பொன்.பேரின்பநாயகம் கலந்துகொண்டார். சிறப்பு விருந்தினராக ஜேர்மனியில் இருந்து வருகை தந்த நிதர்சன் அறினா இணையர் கலந்துகொண்டனர்.

கௌரவ விருந்தினராக ஓய்வு நிலை கோட்டக் கல்விப் பணிப்பாளர் சுப்பிரமணியேஸ்வரன் பங்கேற்றார்.

முன்னதாக சிறுவர்கள் மாலைகள் அணிவிக்கப்பட்டு நடனக் காட்சியோடு அழைத்து வரப்பட்டனர். விருந்தினர்கள் சிறுவர்களை மகிழ்ச்சிப்படுத்தி அழைத்து வந்தனர். சுடர் ஏற்றல், அகவணக்கம் என்பன இடம்பெற்றதனைத் தொடர்ந்து இஷானியா அரங்கு திறந்து வைக்கப்பட்டது. இஷானியா அரங்கினை கனடாவில் இருந்து வருகை தந்திருந்த மதன் நிரோஷா இணையர் திறந்து வைத்தனர்.

வரவேற்பு நடனத்தினை மழலை கவிப்பிரியா வழங்கினார். வரவேற்புரையை இஷானியா கலாமன்றத்தின் ஆசிரியர் பாஸ்கரன் வழங்கினார். தலைமையுரையினை கலாமன்றத்தின் நிறுவுநர் சார்பில் கனடாவில் இருந்து வருகை தந்திருந்த இசை ஆசிரியை மதன் நிரோஷா வழங்கினார். நிகழ்வில் சிறுவர்களுக்கு எளிய முறையில் செய்திகளை வழங்குகின்ற சிறுவர் பாடல்நூலாகிய யோ.புரட்சி எழுதிய 'சேதி சொல்லும் சின்னப்பாட்டு' நூலும் வெளியிடப்பட்டது. நூலின் நயப்புரையினை கலாபூஷணம் நடராசா இராமநாதன் வழங்கினார்.

போரில் பாதிப்புற்ற சிறுவர்களின் குடும்பங்களுக்கான நிதியுதவிகளும் அளிக்கப்பட்டன. நிகழ்வில் பங்கேற்ற 300 சிறுவர்களுக்குப் பரிசுப் பொருள்கள் வழங்கி வைக்கப்பட்டன. நிகழ்வில் வன்னீஸ்வரம் இசைக் குழுவினரின் பாடல்களும் இடம் பெற்றன.

'இஷானியா கலாமன்றம் வன்னி மக்களுக்கு குறிப்பாக சிறுவர்களுக்கும், பொருளாதார நெருக்கடிமிக்கோருக்கும் வழங்கும் பணியானது போற்றத்தக்கது. இவற்றில் சிறுவர்களுக்கு வாராந்தம் வழங்கப்படும் அமுதூட்டல் பணியானது குறிப்பிடத்தக்க அம்சமாகும்' என ஓய்வு நிலை பிரதிக்கல்விப்பணிப்பாளர் கலாநிதி பொன்.பேரின்ப நாயகம் தனது உரையில் குறிப்பிட்டார்.

நன்றியுரையினை ஆசிரியர் ஜெயந்தி வழங்கினார். நிகழ்வில் பங்கேற்ற யாவருக்கும் தாமரை இலையில் அமுது வழங்கப்பட்டது. நிகழ்வில் புலம்பெயர் தேசத்திலிருந்து வருகைதந்த சமூக ஆர்வலர்களும், பொது மக்களும் எனப் பலர் சிறுவர்களோடு இணைந்து பங்கேற்றிருந்தனர். நிகழ்ச்சிகளை இளைய கவிஞர் திரியாயூரான் தொகுத்து வழங்கியிருந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# முல்லைத் தமிழ்ச்சங்கம் சிவராத்திரியன்று அறிமுகம்!





முல்லைத்தீவு மாவட்ட தமிழ்ச் சங்க அறிமுக நிகழ்வு, முள்ளியவளை கல்யாணவேலவர் ஆலயத்தில் சிவராத்திரி தினத்தன்று சிறப்புற முன்னெடுக்கப்பட்டது.
கரைதுறைப்பற்று பிரதேசசபைச் செயலாளர் கா.சண்முகதாசன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக ஈழத்தின் பிரபல எழுத்தாளர் நிலக்கிளி பாலமனோகரன் கலந்துகொண்டார்.
நிகழ்வில் மங்கல விளக்கை ஆலய குருவான ரகுநாதக்குருக்களும், நிலக்கிளி பாலமனோகரன் மற்றும் அவரின் பாரியார், கரைதுறைப்பற்று பிரதேசசபைச் செயலாளர் கா.சண்முகதாசன், முல்லைத்தீவு மத்தியஸ்தசபைத் தலைவர் மு.உதயசங்கர் ஆகியோர் ஏற்றிவைத்தனர்.
தொடர்ந்து கலை நிகழ்வுகளாக முள்ளியவளை தமிழ் வித்தியாலய மாணவர்களின் வரவேற்பு நடனம், முள்ளியவளை கல்யாணவேலவர் ஆலய அறநெறிப் பாடசாலை மாணவர்களின் பண்ணிசை, முள்ளியவளை நுண்கலைக்கல்லூரி மாணவர்களின் குழு இசை, வற்றாப்பளை மகா வித்தியாலய மாணவியின் தனி நடனம், நுண்கலை மாணவர்களின் குழு இசை என்பனவும் இடம்பெற்றன.




# தவக்காலத்தின் பாதையில் இல்லார்க்கு இரங்குவோம்!

உலக கிறிஸ்தவ மக்களும் இன்றைய திருநீற்றுப் புதன் திருவழிபாட்டுத் திருப்பலிச் சடங்குடன் மீண்டுமொரு தவக்காலத்தினுள் நுழைகின்றனர். இந்தத் தவக்காலத்தின் நோக்கமானது கிறிஸ்து மனித விடுதலைக்காக பாடுகள், மரணத்தை ஏற்று உயிர்ப்பின் வழியாக புது வாழ்வைத் தந்த தியாகத்தை சிரம்தாழ்த்தி நினைவேந்தி எம்மைத் தயார்ப்படுத்துவதாகும்.
இந்தத் தவக்காலமானது வருடாவருடம் வந்துபோகும் ஒரு கொண்டாட்டமல்ல. எமது கடந்த காலப் பயணத்தை சீர்தூக்கிப் பார்த்து, நின்று நிதானித்து முடிவெடுக்க அழைப்புவிடுக்கும் மனமாற்றத்தின் காலமாகும். இறைவன் விசேட விதமாக எம்மீது இரக்கத்தைப் பொழிய எம் மத்தியில் பிரசன்னமாகும் அருளின் காலமாகும். தவக்காலம் ஒப்புரவின்காலம், மீட்பின் காலம் என்றும் அழைக்கப்படுகிறது.
முழு உலகத்தையும் போர்மேகங்கள் சூழ்ந்து பேரழிவுகளை ஏற்படுத்துமோ என்ற அச்சம், விலைவாசி உயர்வு, அத்தியாவசியப் பொருள்கள் தட்டுப்பாடு மற்றும் பொருளாதாரப் பின்னடைவுகளால் ஏற்பட்ட வாழ்வாதார நெருக்கடி, கண்ணுக்குத் தெரியாத கொரோனா வைரஸின் கொலைவெறித் தாக்கம், இனவெறி, மொழிவெறி, நிறவெறி என்ப் பல முனைத் தாக்கங்கள் மத்தியில் நாம் சந்திக்கும் இந்தத் தவக்காலம் தகுந்த முறையில் நோன்பை அனுசரிக்க சந்தர்ப்பங்களைக் கைகொடுப்பதே காலத்தின் தேவையாக அமைகிறது.
விலைவாசி உயர்வு, பொருளாதார நெருக்கடி, வாழ்வாதாரப் போராட்டம், திட்டமிட்ட போதைப்பொருள் தாக்கம், நிலநடுக்கப் பேரழிவுகள், உரிமை மறுப்பு போன்ற பலமுனைத் தாக்கங்கள் மத்தியில் நாம் முன்னெடுக்கவுள்ள இந்தத் தவக்காலம் மன்னிப்பு, தியாகம், பகிர்வு, செப உதவி, களப்பணி போன்றவற்றில் நாம் ஈடுபட நல்ல சந்தர்ப்பத்தை வழங்குகின்றது.
தவம் என்பது காவியுடை தரிப்பதும் முகவாட்டமாக இருப்பதும் அல்ல. மாறாக இதயத்தை உடைப்பது. அதிலிருந்து அன்பு, பிரிவு, இரக்கம், மன்னிப்பு, சமத்துவம் பகிர்வு போன்றவற்றை பிறர் சுவைக்கக் கொடுப்பது. இல்லார்க்கும், இயலார்க்கும் கைகொடுப்பது. ஆசைவலைகளில் அகன்று வேடமில்லா, கபடமில்லா இன, மத, பேதமில்லாவாழ்வு வாழ்வது. ஆனால், நாம் பகட்டிலும், ஆடம்பரத்திலும் சமூக கௌரவம் தேடி மாயச் சிந்தனையில் மயங்கிக் கிடக்கின்றோம். ஆடம்பரம் அகற்றி அளவோடு அனுபவித்து, எளிமையைக் கடைப்பிடித்து, ஏழைகளைத் தாங்கி நிற்பதே உண்மையான தவம் என உணரத் தவறிவிடுகின்றோம். ஈதல், இறைவேண்டல், நோன்பிருத்தல் ஆகிய செயல்களை புதிய கோணத்தில் முன்னெடுக்க அழைக்கும் இயேசுவின் பார்வையை எமதாக்குவோம். பக்திச் செயல்கள் தம்பட்டம் அடிப்பதற்கல்ல. எமக்குள் எம்மைத் தேடி நான் என்ற மன நிலையைவிட்டு நாம் என்ற பொதுநிலைக்கு எம் ஒவ்வொருவரையும் கொண்டுவரத் தேவையான அருமருந்து அவை என்றுணர்வோம். நம் அக ஆன்மிகம் இயேசுவின் ஆன்மிகமாகி நம்மில் ஒளிரட்டும். என் உடன் வாழ்வோர் சமூகத்தோர், திருஅவை, நாடு உலகம் என்ற பார்வையில் மகிழ்ச்சியும், உயர்ச்சியும், அமைதியும், சமத்துவமும் உருவாக என்னையே சாம்பராக்க சம்மதிக்கின்றேன் என்பதன் அடையாளமாக இன்று நெற்றியில் ஏற்ற தவத்தலத்தின் மீது உறுதியுரை எடுத்துச் செயலாற்ற முயற்சிப்போம்.

எஸ்.யோகராசா
கொழும்புத்துறை

## மதமாற்றத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வீதமாகக் குறைந்துள்ளது. இந்த விகிதாசாரம் மேலும் குறையாமல் இருப்பதற்கு இலங்கை அரசு துரித நடவடிக்கை எடுக்கவேண்டும். இந்தியாவின் பல மாநிலங்களில் மதமாற்றத் தடைச் சட்டத்தைக் கொண்டு வந்தது போல இலங்கையிலும் மதமாற்ற தடைச் சட்டத்தைக் கொண்டுவர வேண்டும் - என ஜனாதிபதியின் பாதுகாப்பு ஆலோசகர் சாகல ரத்நாயக்கவிடம் வலியுறுத்தியுள்ளார் இந்திய இந்து மக்கள் கட்சியின் தலைவர் அர்ஜுன் சம்பத்.
ஜனாதிபதியின் அலுவலகத்தில் நேற்றுக்காலை சாகல ரத்நாயக்க - அர்ஜுன் சம்பத் இடையிலான சந்திப்பு இடம்பெற்றது. இந்தச் சந்திப் பின்போதே அவர் இவ்வாறு வலியுறுத்தியுள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:-
இலங்கையின் இறையாண்மையையும் ஒற்றுமையையும் எப்பொழுதும் இந்தியா பேணும், பாதுகாக்கும், வளர்க்கும். இந்தியாவின் இன்றைய 'அயல் நாட்டுக்கு முன்னுரிமை' என்ற கொள்கையால், இலங்கையின் பொருளாதார வளர்ச்சிக்கு இன்றுள்ள துன்பங்களுக்கும் இனிவரும் துன்பங்களுக்கும் வற்றாத உதவி கிடைக்கும். இன்று இந்தியாவை ஆளுகின்ற அரசு, இலங்கையின் குரலுக்கு செவிமடுக்கவேண்டுமென்றால் இலங்கையில் இந்துக்களுக்கு இலங்கை அரசு முன்னுரிமையும் சமவாய்ப்பு மேன்மையும் கொடுக்கவேண்டும். இந்துக்களுக்கு முன்னுரிமை கொடுக்கும் கொள்கைத் திட்டத்தை நீங்கள் வகுக்கவேண்டும். யாழ்ப்பாண கலாசார நிலையத்துக்குக் கடந்தவாரம் 'சரஸ்வதி மண்டபம்' எனப் பெயர் சூட்டியமையானது இலங்கையிலும் இந்தியாவிலும் வாழ்கின்ற இந்துக்களுக்கு மகிழ்ச்சிதரும் விடயமாகவுள்ளது. அவ்வாறே கடந்த தீபாவளி நாளன்று ஜனாதிபதி அலுவலக வளாகத்தில் நந்திக்கொடியை பறக்கவிட்டு இலங்கை இந்துக்களையும் இந்திய இந்துக்களையும் மகிழ்வித்தீர்கள். இவ்வாறு மாதந்தோறும் இந்துக்களுக்கான ஒரு எழுச்சி நிகழ்ச்சியை முன்னெடுத்துச் செல்வீர்களானால் உங்கள் குரலுக்கு இந்தியா செவிசாய்க்கும்.
இலங்கையில் இந்துக்களின் எண்ணிக்கை முன்பு 24 வீதமாக இருந்தது. இப்பொழுது 12.3 வீதமாகக் குறைந்துள்ளது. இந்த விகிதாசாரம் மேலும் குறையாமல் இருப்பதற்கு இலங்கை அரசு துரித நடவடிக்கை எடுக்க வேண்டும். கிறிஸ்தவ மதமாற்றிகளும், முகமதிய காதல் வலை வீசுநர்களும் இந்துக்களின் எண்ணிக்கையைக் கடுமையாகக் குறைக்கிறார்கள். இந்தியாவின் பல மாநிலங்களில் மதமாற்றத் தடைச் சட்டத்தைக் கொண்டு வந்ததுபோல இலங்கையிலும் மதமாற்றத் தடைச் சட்டத்தைக் கொண்டுவர வேண்டும். முன்பு பசு பாதுகாப்புச் சட்ட வரைவைக் கொண்டு வந்தீர்கள். அதை இன்னமும் நாடாளுமன்றில் நிறைவேற்றிச் சட்டமாக்கவில்லை, அதையும் சட்டமாக்குங்கள். வடக்கே திருக்கயிலாயத்திலிருந்து தெற்கே கதிர்காமம் வரை பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னிருந்த பழமையான நிலப்பகுதியின் ஒரு பகுதியே இந்து சமய நாடான இலங்கை. புதிதாக உருவாக்கவுள்ள இலங்கை அரசமைப்பு விதிகளில் இந்து சமயத்துக்கு முன்னுரிமை கொடுக்கின்ற விதியையும் சேர்ப்பீர்களானால் இலங்கையிலுள்ள இந்துக்களும் இந்தியாவிலுள்ள இந்துக்களும் மகிழ்ச்சி அடைவார்கள். இந்திய அரசாங்கம் உங்கள் குரலுக்குச் செவிசாய்க்கும் - என்றார். (அ-ம)


## வீட்டுத் தோட்ட பராமரிப்பாளர் தேவை

யாழ்ப்பாணம் நகரப் பகுதியில்
வீட்டுத்தோட்டத்தைப் பாரமரிப்பதற்கு அனுபவம்
உள்ள ஒருவர் தேவை.
இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.
சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்
தொடர்பு : 0771209998




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம் 11 . 04 . 1934 — மறைவு 20 . 02 . 2023



## பொன்னுத்துரை அன்னம் (பூமணி)

பாண்டியன்தாழ்வை பிறப்பிடமாகவும் கொண்டலடி வீதியை வதிவிடமாகவும் கொண்ட அன்னம் (பூமணி) பொன்னுத்துரை அவர்கள் கடந்த (20.02.2023) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ராசு, ராசம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கந்தையா செல்லாச்சி தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற பொன்னுத்துரை அவர்களின் அன்பு மனைவியும், காலஞ் சென்றவர்களான கனகம்மா, வள்ளியம்மா, பேபி, விஸ்வலிங்கம் மற்றும் கந்தையா, பொன்னம்பலம், பூவிலிங்கம், தேவரஞ்சினி ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்க்ளான பாக்கியம், திலகவதி மற்றும் தம்பிஐயா ஆகியோரின் பாசமிகு மைத்துனியும், மகேந்திரா (தம்பி மகேந்திரா எலக்ரிக்கல்), மனோகரா, மகேஸ்வரா, பாமா, பிறேமா, மதியழகன், பாமினி ஆகியோரின் பாசமிகு தாயாரும், தயாதேவி, மாதுளா, அரியராசா, ஸ்ரீபரமேஸ்வரன், வேரா, ஸ்ரீதரன் ஆகியோரின் அன்பு மாமியாரும், துளசிவந்தனா, சரண்ணியா, அகிலன், அகிலா, தனுசிகன், தேனுசன், வேணுசன், திவ்யா, ஜன்ஷிகா, தேனுசன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (23.02.2023) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**25, கொண்டலடி வீதி, நல்லூர்.**
**தொ.பே.இல:077 613 9067**
**077 812 4154**

**தகவல்: குடும்பத்தினர்.**

(CS 23617) 1-6

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம் 21 . 08 . 1937 — மறைவு 23 . 01 . 2023



கடந்த (23.01.2023) திங்கட்கிழமை சிவபதமடைந்த எங்கள் அன்புத் தாயார்.

## அமரர் சிவகுரு ஜெகசோதி

அவர்களின் அந்தியேட்டி வீட்டுக்கிரியைகள் இன்று (22.02.2023) புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும், மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

**நுணாவில் மேற்கு, சாவகச்சேரி.**

**குடும்பத்தினர்.**

(CR 39298) 4-6

# மரண அறிவித்தல்

பிறப்பு 17 . 11 . 1939 — இறப்பு 20 . 02 . 2023



## வேலுப்பிள்ளை கருணாகரன்

**(இளைப்பாறிய பிரதம சுங்க இலாக சிறாப்பரும், லங்கா பாமசிக்யூட்டிகல் உரிமையாளர்)**

நயினை 15ஆம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும், 28 அலெக்சாண்டர் வீதியை வதிவிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை கருணாகரன் (இளைப்பாறிய பிரதம சுங்க இலாக சிறாப்பரும், லங்கா பாமசிக்யூட்டிகல் உரிமையாளர்) கடந்த (20.02.2023) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை, நாகம்மாவின் ஏகபுத்திரனும், காலஞ்சென்ற கனகசபை, அன்னப்பிள்ளையின் (கரம்பொன்) மருமகனும், திலகவதியின் (இளைப்பாறிய பிரதம மருந்தாளர்) ஆருயிர் கணவரும், பிரதீபன், பிரசன்னா (சிங்கப்பூர்) ஆகியோரின் தகப்பனும் கனகம்மா, பாலினியின் மாமனாரும், கரிஷ்மா, மயங்காவின் பேரனும், விஜயகுலராணி மதுரலிங்கம், காலஞ்சென்ற ராஜேஸ்வரியின் சகோதரனும், வித்தியாவதி, பாலேந்திரா, மகேந்திரனின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் புதன்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் வைக்கப்பட்டு (28, அலெக்சாண்டர் வீதி, கொழும்பு 06.) கிரியைகள் வியாழக்கிழமை 23.02.2023 முற்பகல் 10.00 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டு, பொரளை கனத்தை மயானத்தில் பி.ப 12.30 மணியளவில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல்: குடும்பத்தினர்.**

(CR 3...6)

# மரண அறிவித்தல்

தோற்றம் 12 - 04 - 1955 — மறைவு 18 - 02 - 2023



## நவரத்தினம் கிருஸ்ணபவான்

கட்டுவன் ஊரங்குணையை பிறப்பிடமாகவும் கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட நவரத்தினம் கிருஸ்ணபவான் கடந்த (18.02.2023) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நவரத்தினம் அன்னம்மா தம்பதியினரின் அன்பு மகனும், சரவணபவன், கருணாகரன், பாஸ்கரன் காலஞ்சென்ற சிறிதரன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், சத்தியஸ்ரீ, சைலயா, கமலினி, விதுசா, அனிதா, சுஜிதா, சகானன், சாத்விகா காலஞ்சென்ற செந்தூரன் ஆகியோரின் சித்தப்பாவும், ஜெனுசன், ஜெரோசன், ஜெனிரா, ஜெனிலியா, கிருசன், தனுசன், அரிசன், காஞ்சினி, கனுஷா, கவின், சதான்சனா, சிறிவற்சன், ஜெஜிரா, றஜன், கெஸியா ஆகியோரின் அன்புத் தாத்தாவும், சிவமணி, மீனாம்பாள், ஞானேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும், ஜனார்த்தனன், சுதன், காந்தீபன், செந்தூரன், கோபிநாத், நிரோஜன் ஆகியோரின் மாமனார் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.02.2023) புதன்கிழமை கொக்குவில் உடையார் ஒழுங்கையில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று முற்பகல் 11.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**கொக்குவில், உடையார் ஒழுங்கை.**

**தகவல் குடும்பத்தினர்.**
**077 666 0599**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கடைகள் வாடகைக்குண்டு

யாழ். வைத்தியசாலை வீதியில் முதலாம் மாடிக் கடைகள் வாடகைக்குண்டு. அலுவலகத்திற்கும் ஏற்றது

(CS 23595)(3/6) தொடர்பு எண் : 077 828 1956

## வேலையாட்கள் தேவை

Bus Booking மற்றும் சிட்டை எழுதுனர் உடன் தேவை.
ஆர்வமுள்ளவர்கள் மட்டும் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு : 076 0094 946

## வேலைவாய்ப்பு

வடமராட்சியில் இயங்கும் முன்னணி தனியார் நிறுவனமொன்றிற்கானது.

- **தகைமை**: O/L கணிதம் உட்பட 6 பாடம் சித்தி
- **வயது**: (18-65) ஆண், பெண்
- **குறிப்பு**: வடமராட்சியில் உள்ளவர்களுக்கு முன்னுரிமை

தொடர்புகளுக்கு:
**077 224 7897**
**071 415 9613**

## CENTRE FOR HOLISTIC HEALING
### Diploma In Psychological Counseling

Applications are Called for the Sixth Batch of Students for One Year Diploma in Psychological Counseling ( Week- end classes ) Conducted by the Centre for Holistic Healing. Applicants Should Posses A Maximum Qualifications of 3 Passes in G.C.E.A/L with Ordinary Pass In English in the G.C.E.O/L.
The Classes will be Conducted between 9.00 a.m and 1.00 p.m at "Jaffna College Undergraduate Department", 464, Hospital Road, Jaffna.
Apply to the Undersigned on or before 01.03.2023 with the Curriculum Vitae (CV) via Post or Direct.


**The Director**
**Centre for Holistic Healing**
**Mc.Leod Hospital Premises**
**Inuvil.**

**Contatct No:**
**077 737 0494**
**077 917 7230**

(cs 23612)

## 45ஆம் நாள் வீட்டுக்கிருத்திய அழைப்பு

தோற்றம் 06.12.1996 — மறைவு 10.01.2023



கடந்த (10.01.2023) செவ்வாய்க் கிழமை சிவபதமடைந்த எமது மகள்

அமரர்
### மகிந்தன் பிரியவதனா

அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் கடந்த (19.02.2023) ஞாயிற்றுக்கிழமை கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்றது. வீட்டுக்கிருத்திய கிரியைகள் நாளை (23.02.2023) வியாழக்கிழமை மதியம் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அமரரின் ஆத்மசாந்திப்பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

GPS விளையாட்டரங்க வீதி,
கோப்பாய் தெற்கு, கோப்பாய்.

குடும்பத்தினர்.

(CS 236191)-6

## 25ஆவது பிறந்தநாளும் முதலாம் ஆண்டு நினைவலையும்
## அமரர் பரமேஸ்வரன் துலக்ஷன்

(புரியோவான் கல்லூரி பழைய மாணவன்)

மண்ணில் 06.03.1998 — விண்ணில் 04.03.2022

திதி:-துதியை



வண்ணமான வாழ்வில்
வசந்தமாய் வந்துதித்த
எங்கள் குடும்பத்தின் இளவலே!

செல்ல மகனாக இனிமை
நிறைந்த தங்க ரதமே தளிர் கொடியே
தாங்காத சோகத்தில் எங்களை ஆழ்த்தி
விரைந்தே காலன் வசப்பட்ட
மாயம் என்னவோ?

சின்னஞ் சிறுவயதில்
சிங்காரமாய் சிரித்து
அமிர்தமாய் செல்லக்கதை பேசி
ஆனந்தங்களை கொட்டி இழைத்து
துன்பம் தீர்த்த துலக்ஷா - நீ
பிரிந்து போன மாயம் என்னவோ?

கட்டிளம் பருவத்தில்
கதிரவன் போல் வளர்ந்து
உயர்ந்தோங்கிய மன்னவனே
விளையாட்டாக எதையும் எடுப்பாய்
வி(தி)னையாக மாறிவிட்டதோ

யார் கண் பட்டதென்று மீளாத்துயில் கொண்டு
போனதன் மாயம் என்னவோ?
ஆறாத்துயரில் அழுதழுது அரற்றுகின்றோம்
ஆறுதல் அற்றுத் தவிக்கின்றோம்
கொடூர் கூற்றுவன் வசமாகி ஓராண்டு கழிகின்றதே
உன் நினைவலைகள் ஊசலாடுகின்றது எம் நெஞ்சத்தில்
வந்துவிடு மீண்டும் எம் குலத்தில் தெய்வமாக.....

குடும்பத்தினர்.
127, கனகரட்ணம் வீதி,
அரியாலை.

## வலிகாமம் தெற்கு பிரதேசசபை - சுன்னாகம் ஏலவிற்பனை

வலிகாமம் தெற்கு பிரதேச ச்பைக்குரிய பின்வரும் பாவித்த பொருட்கள் பகிரங்க ஏலத்திற்கு விற்கப்படவுள்ளன.

**காலம் : 01.03.2023 புதன்கிழமை காலை 10.00 மணி**
**இடம் : தலைமை அலுவலகம், வலி தெற்கு பிரதேசசபை, சுன்னாகம்**

### பொருட்கள் விபரம்

இலத்திரனியல் பொருட்கள், வாகன பற்றிகள், உலோகப் பொருட்கள், மின்னியல் பொருட்கள், தளபாடப் பொருட்கள், வாகன பழைய பொருட்கள், ரயர்கள் மற்றும் வெற்று தார் பரல்கள்.

### நிபந்தனைகள்

- ஏலதாரராக கலந்து கொள்பவர் ரூபா 100.00 மீளளிக்கப்படாத வைப்புப் பணமாக செலுத்துதல் வேண்டும். மு.ப. 10.00 பின்னர் ஏலதாரர் பதிவுகள் மேற்கொள்ளப்படாது.
- சித்தியடைந்த ஏலதாரர் ஒப்புக்கொண்ட ஏலத்தொகை முழுவதையும் செலுத்திப் பொருட்களை அன்றைய தினமே அலுவலகத்தில் இருந்து அகற்றுதல் வேண்டும்.
- மேலதிக விபரங்களை அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம். தொலைபேசி இலக்கம் 0212240017

**க.தர்சன்**
**தவிசாளர்,**
**வலிகாமம் தெற்கு பிரதேச-சபை,**
**சுன்னாகம்.**

## மரண அறிவித்தல்

மலர்வு 26 • 05 • 1958 — உதிர்வு 20 • 02 • 2023



### திருமதி மஞ்சுளா இரத்தினசபாபதி

வேலணை மேற்கு, வேலணை 8ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், மீசாலை மேற்கு, மீசாலையை வசிப்பிடமாக்வும் கொண்ட திருமதி மஞ்சுளா இரத்தினசபாபதி நேற்றுமுன்தினம் (20.02.2023) திங்கட் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை பொன்னையா - சிவக்கொழுந்து தம்பதிகளின் அன்பு மகளும், செல்லமுத்து கிட்ண பிள்ளை - நாகரத்தினம் (தில்லையம்மா) தம்பதிகளின் அன்பு மருமகளும், இரத்தினசபாபதியின் பாசமிகு மனைவியும், பகீரதன், கேதநயனி (லண்டன்), பிரவீனன் (கூட்டுறவுக் காப்புறுதி நிறுவனம் - யாழ்ப்பாணம்), அர்ச்சனா (கலைப்பீடம் - முதலாம் வருட மாணவி, மட்டக்களப்பு) ஆகியோரின் அன்புத் தாயாரும், செகேஸ்வரி (லண்டன்), விஜயலட்சுமி (லண்டன்), உலகநாதன் (கனடா), அந்திவண்ணன் (லண்டன்), சௌந்தர ராஜன் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், ரஜீவ் (லண்டன்) அவர்களின் அன்பு மாமியாரும், நட்சத்திரா, அகலவன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், பரராஜசிங்கம் (லண்டன்), பூலோகசுந்தரம்பிள்ளை (லண்டன்), ஶ்ரீபாலசரஸ்வதி (கனடா), மணிமேகலை (லண்டன்), மங்கள கௌரி (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (23.02.2023) வியாழக் கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வேம்பிராய் இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

A9 வீதி, புகையிரதநிலைய அருகாமை,
மீசாலை மேற்கு, மீசாலை.

(CS/23606)4,6

தகவல்:
குடும்பத்தினர்.

**077 656 8427**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கேள்வி அறிவித்தல்
## வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம்
## சபைநிதி வேலைத்திட்டம் 2023
## கட்டம் I

01. தலைவர், பெறுகைக்குழு, வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம் அவர்களினால் தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட கேள்விகள் கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப் பட்டவாறான வேலைகளுக்காகக் கோரப்படுகின்றது.

02. தேசியபோட்டி கேள்விகோரல் நடைமுறைக்கு அமைவாக கேள்வி கோரப்படுகின்றது. ஆயினும் நிதி அமைச்சினால் வெளியிடப்பட்ட03/2020(i)ஆம் இலக்க 11.01.2021ஆந் திகதிய,04/2016(ii)ஆம் இலக்க 08.05.2019ஆந் திகதிய, 04/2016(iii)ஆம் இலக்க 18.02.2021ஆந் திகதிய மற்றும் 04/2016(iv) இலக்க 09.02.2023ஆந் திகதிய பொதுநிதிச் சுற்றறிக்கைகளுக்கு அமைவாக வடமாகாணத்தை சார்ந்தவருக்கும் மற்றும் வேண்டப்படும் உரிய தரத்தை கொண்டிருப்போருக்கும் முன்னுரிமையளிக்கப்படும்.

03. இல 1-24 வரையான கேள்விகளுக்கு கேள்வி பெறத் தகுதியுடையவராவதற்கு, வெற்றிபெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், அட்டவணையிற் காட்டியபடி வீதி மற்றும் கட்டடம் புனரமைப்புக்கு பொருத்தமான தரத்தில் நிர்மாண தொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் (CIDA) பதிவு மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும்.

04. தேவையான தகைமைகள், கேள்வி ஆவணம் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) பகுதி 5இல் காட்டப்பட்டுள்ளது.

05. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் வலிகாமம் தெற்கு பிரதேசசபை தலைமையலுவலகத்தில் (தொலைபேசி 0212240017) இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் 22.02.2023 தொடக்கம் 07.03.2023 ஆம் திகதி வரை வேலைநாட்களில் மு.ப 9.00 மணிமுதல் 14.00 மணிவரையான காலப்பகுதியில் கேள்வி ஆவணங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

06. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் வலிகாமம் தெற்குபிரதேசசபை சுன்னாகம் எனும் இடத்திலிருந்து 22.02.2023 திகதியிலிருந்து 07.03.2023ம் திகதிவரை வேலை நாட்களில் காலை 09.00 மணிக்கும் பி.ப 14.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.3000/- (வரிநீங்கலாக) இனை செலுத்திபெற்றுக் கொள்ளலாம். இத் தொகை-பணமாகச் செலுத்தப்பட வேண்டும்.

07. பெறுகை ஆவணங்களினை இரு பிரதிகளில் தயாரித்து தனித்தனியாக இரு உறைகளில் இட்டு 08.03.2022ம் திகதி மு.ப 10.30 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியவாறு தவிசாளர் ,பிரதேசசபை பெறுகைக்குழு, வலிகாமம் தெற்குபிரதேசசபை, சுன்னாகம் எனும் முகவரிக்கு பதிவுத் தபாலிலோ அல்லது அலுவலகத்திலுள்ள கேள்விப் பெட்டியினுள் நேரடியாகவோ இடப்படல் வேண்டும். காலந்தாழ்த் தப்பட்ட கேள்வி நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்விநேரம் முடிவடைந்தவுடன் வருகைதரும் கேள்விதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

08. கிடைக்கப்பெற்ற கேள்விகளை நிராகரிப்பதற்கு அல்லது விலைக் கேள்வியின் ஒருபகுதியினை மட்டும் ஏற்றுக் கொள்வதற்கு அல்லது இப்பெறுகையை முழுமையாக இரத்துச் செய்வதற்கு பெறுகைக் குழுவிற்கு அதிகாரமுண்டு.

09. கேள்விப் பிணைவைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.

| இல | வேலைவிபரம், ஒப்பந்த இலக்கம் | மதிப்பீட்டுத் தொகை (Mn) | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் | கேள்வி சமர்ப்பிக்கப்படும் இறுதித் திகதியில் இருந்து கேள்வி செல்லுபடியாகும் காலம் | | வேண்டப்படும் கேள்விப்பிணை செல்லுபடியாகும் காலம் | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | நாட்கள் | திகதி | தொகை | திகதி |
| 1 | மயிலங்காடு கருணாகரப்பிள்ளையார் வீதி குறுக்கு வீதி NP/14/41/15/02(05)/CF/2023/01 | 2.063 | 90 நாட்கள் | C9,C8& C7 வீதிப் புனரமைப்பு | 63 நாட்கள் | 10.05.2023 | 21,000.00 | 07.06.2023 |
| 2 | ஏழாலை கண்ணகி அம்மன் குறுக்கு வீதி, அன்னமார் வீதி மற்றும் ஏழாலை மத்தி காளி கோவில் குறுக்கு NP/14/41/15/02(05)/CF/2023/02 | 2.435 | 90 நாட்கள் | C9,C8& C7 வீதிப் புனரமைப்பு | 63 நாட்கள் | 10.05.2023 | 25,000.00 | 07.06.2023 |
| 3 | ஆலங்கட்டை பிள்ளையார் வீதி NP/14/41/15/02(05)/CF/2023/03 | 2.369 | 90 நாட்கள் | C9,C8& C7 வீதிப் புனரமைப்பு | 63 நாட்கள் | 10.05.2023 | 24,000.00 | 07.06.2023 |
| 4 | ஈவினை பிள்ளையார் வீதி மிகுதி வேலை மற்றும் விவசாய குறுக்கு வீதி NP/14/41/15/02(05)/CF/2023/04 | 2.746 | 90 நாட்கள் | C9,C8& C7 வீதிப் புனரமைப்பு | 63 நாட்கள் | 10.05.2023 | 28,000.00 | 07.06.2023 |
| 5 | இலந்தையடி வீதி (மத்தாளோடை), மயிலங்காடு ஒன்றிய ஒழுங்கை மற்றும் பிரதான கொலனி வீதி 3ம்,4ம் கிளை வீதிகள் NP/14/41/15/02(05)/CF/2023/05 | 2.394 | 90 நாட்கள் | C9,C8& C7 வீதிப் புனரமைப்பு | 63 நாட்கள் | 10.05.2023 | 24,000.00 | 07.06.2023 |
| 6 | சைவமகாஜனா குறுக்குவீதி, சிவகுரு கடை வீதி, குப்பிளான் சந்திக்கு அருகாமையில் உள்ள கிளை வீதி மற்றும் குப்பிளான் மயிலங்காடு பிரதான வீதியின் குறுக்கு வீதி NP/14/41/15/02(05)/CF/2023/06 | 2.958 | 90 நாட்கள் | C9,C8& C7 வீதிப் புனரமைப்பு | 63 நாட்கள் | 10.05.2023 | 30,000.00 | 07.06.2023 |
| 7 | சூராவத்தை முத்துமாரி அம்மன் வெள்ளவாய்க்கால் இணைப்பு வீதி, இலங்கையர்கோன் குறுக்கு வீதி மற்றும் ஏழாலை வாசியசாலை வீதி கிளை வீதி NP/14/41/15/02(05)/CF/2023/07 | 2.136 | 90 நாட்கள் | C9,C8& C7 வீதிப் புனரமைப்பு | 63 நாட்கள் | 10.05.2023 | 22,000.00 | 07.06.2023 |
| 8 | நாகம்மாள் வீதி கட்டம் I NP/14/41/15/02(05)/CF/2023/08 | 3.521 | 90 நாட்கள் | C9,C8& C7 வீதிப் புனரமைப்பு | 63 நாட்கள் | 10.05.2023 | 36,000.00 | 07.06.2023 |
| 9 | கதிரமலை குறுக்கு வீதி (கலைவாணி சனசமூக நிலைய பின் வீதி) NP/14/41/15/02(05)/CF/2023/09 | 1.852 | 60 நாட்கள் | C9& C8 வீதிப் புனரமைப்பு | 49 நாட்கள் | 26.04.2023 | 19,000.00 | 24.05.2023 |
| 10 | கினாமரம் 1ம் குறுக்கு வீதித்திருத்தம் மற்றும் தில்லைகட்டி குறுக்கு வீதி NP/14/41/15/02(05)/CF/2023/10 | 2.513 | 90 நாட்கள் | C9,C8& C7 வீதிப் புனரமைப்பு | 63 நாட்கள் | 10.05.2023 | 26,000.00 | 07.06.2023 |
| 11 | பிரதேச செயலக குறுக்கு வீதி மிகுதி வேலை மற்றும் கதிரமலை 3ம், 4ம் ஒழுங்கைNP/14/41/15/02(05)/CF/2023/11 | 1.771 | 60 நாட்கள் | C9& C8 வீதிப் புனரமைப்பு | 49 நாட்கள் | 26.04.2023 | 18,000.00 | 24.05.2023 |
| 12 | தம்பிமுத்து உபாத்தியாயர் 5ம் குறுக்கு வீதி, ஆறுமுகம் 1ம் குறுக்கு வீதி, கினாமரம் 4ம் குறுக்கு வீதி மற்றும் சுலக்சன் வீதி NP/14/41/15/02(05)/CF/2023/12 | 1.314 | 60 நாட்கள் | C9& C8 வீதிப் புனரமைப்பு | 49 நாட்கள் | 26.04.2023 | 14,000.00 | 24.05.2023 |
| 13 | நாகம்மாள் வீதி கட்டம் II மற்றும் புளியடி வீதி 1ம் குறுக்கு வீதி NP/14/41/15/02(05)/CF/2023/13 | 2.525 | 90 நாட்கள் | C9,C8& C7 வீதிப் புனரமைப்பு | 63 நாட்கள் | 10.05.2023 | 26,000.00 | 07.06.2023 |
| 14 | அன்னமார் கோவில் வீதி NP/14/41/15/02(05)/CF/2023/14 | 1.116 | 60 நாட்கள் | C9& C8 வீதிப் புனரமைப்பு | 49 நாட்கள் | 26.04.2023 | 12,000.00 | 24.05.2023 |
| 15 | தம்மளை வீதி NP/14/41/15/02(05)/CF/2023/15 | 2.447 | 90 நாட்கள் | C9,C8& C7 வீதிப் புனரமைப்பு | 63 நாட்கள் | 10.05.2023 | 25,000.00 | 07.06.2023 |
| 16 | கருணாகரப்பிள்ளையார் வீதி கட்டம் NP/14/41/15/02(05)/CF/2023/16 | 2.869 | 90 நாட்கள் | C9,C8& C7 வீதிப் புனரமைப்பு | 63 நாட்கள் | 10.05.2023 | 29,000.00 | 07.06.2023 |
| 17 | மல்வம் வீதி மற்றும் மல்வம் குறுக்கு வீதிகள் மற்றும் மல்வம் சேமக்காலை வீதி குறுக்கு வீதி NP/14/41/15/02(05)/CF/2023/17 | 1.950 | 60 நாட்கள் | C9& C8 வீதிப் புனரமைப்பு | 49 நாட்கள் | 26.04.2023 | 20,000.00 | 24.05.2023 |
| 18 | சங்குவேலி பிள்ளையார் 2ம் குறுக்கு வீதி, வில்வக்குடையான் 3ம் குறுக்கு வீதி மற்றும் வில்வக்குடையான் 6ம் குறுக்கு வீதி NP/14/41/15/02(05)/CF/2023/18 | 2.398 | 90 நாட்கள் | C9,C8& C7 வீதிப் புனரமைப்பு | 63 நாட்கள் | 10.05.2023 | 24,000.00 | 07.06.2023 |
| 19 | பட்டியோலை குறுக்கு வீதி, பூவோடை மயான கிளை வீதி மற்றும் மல்வம் 2ம் கிளை வீதி NP/14/41/15/02(05)/CF/2023/19 | 3.340 | 90 நாட்கள் | C9,C8& C7 வீதிப் புனரமைப்பு | 63 நாட்கள் | 10.05.2023 | 34,000.00 | 07.06.2023 |
| 20 | பத்தானை வீதி கட்டம் I NP/14/41/15/02(05)/CF/2023/20 | 2.869 | 90 நாட்கள் | C9,C8& C7 வீதிப் புனரமைப்பு | 63 நாட்கள் | 10.05.2023 | 29,000.00 | 07.06.2023 |
| 21 | அளவோடை கிளை வீதி மற்றும் தாவடி மானிப்பாய் கிளை வீதி NP/14/41/15/02(05)/CF/2023/21 | 1.793 | 60 நாட்கள் | C9& C8 வீதிப் புனரமைப்பு | 49 நாட்கள் | 26.04.2023 | 18,000.00 | 24.05.2023 |
| 22 | ஆசாரி வீதி உப ஒழுங்கை மற்றும் செட்டிவளவு உப வீதி NP/14/41/15/02(05)/CF/2023/22 | 2.721 | 90 நாட்கள் | C9,C8& C7 வீதிப் புனரமைப்பு | 63 நாட்கள் | 10.05.2023 | 28,000.00 | 07.06.2023 |
| 23 | பத்தானை வீதி கட்டம் II NP/14/41/15/02(05)/CF/2023/23 | 1.478 | 60 நாட்கள் | C9& C8 வீதிப் புனரமைப்பு | 49 நாட்கள் | 26.04.2023 | 15,000.00 | 24.05.2023 |
| 24 | Construction of Market Building malvam and Improvement of Access path area at Maruthanarmadam public market NP/14/41/15/02(05)/CF/2023/24 | 2.234 | 90 நாட்கள் | C9,C8& C7 கட்டடப் புனரமைப்பு | 63 நாட்கள் | 10.05.2023 | 23,000.00 | 07.06.2023 |

10. கேள்வி தொடர்பான முதற் கூட்டம் வலிகாமம் தெற்கு பிரதேசசபை தலைமை அலுவலகத்தில் 28.02.2023ம் திகதியன்று மு.ப 10.00 மணிக்கு நடைபெறும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

க.தர்சுஷன்,
தவிசாளர்,பெறுகைக்குழு,
வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம்.

22.02.2023

(CR 39293)(3/6)

## யாழ். வருகின்றார் சஜித் பிரேமதாஸ

கொழும்பு, பெப். 22

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நாளை யாழ்ப்பாணத்துக்கு வருகைதரவுள்ளார். உள்ளூராட்சித் தேர்தல் பரப்புரை நடவடிக்கைகளுக்காகவே அவர் யாழ்ப்பாணத்துக்கு வரவுள்ளார்.

அனலைதீவு மற்றும் மூளாய் பகுதிகளில் இடம்பெறும் தேர்தல் பரப்புரை நடவடிக்கைளில் பங்கெடுப்பதற்காகவே அவர் யாழ்ப்பாணம் வரவுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இதேவேளை- வவுனியாவில் இன்று இடம்பெறும் தேர்தல் பரப்புரை நடவடிக்கைகளிலும் சஜித் பங்கெடுப்பார் என்றும் அறிய முடிகின்றது. (அ-ம)

### பொருளாதார...

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வலுவான பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கு முறையான திட்டம் வகுக்கப்படவேண்டும். தற்போதைய அரசு முன்னெடுத்துள்ள பொருளாதார வேலைத்திட்டத்தின் காரணமாக கடந்த சில மாதங்களாக இருந்த பொருளாதார நெருக்கடிகள் ஓரளவு குறைந்துள்ளன. சில அரசியல் கட்சிகள் இதற்கான முன்மொழிவுகளை முன்வைக்காமல் மக்களிடம் பொய்சொல்லி அரசியல் நாடகம் ஆடுகின்றன. நாம் இன்று கடினமான காலங்களைக் கடந்து கொண்டிருக்கிறோம். ஒருவீட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடையும்போது வீட்டிலுள்ளவர்கள் அதை உணர்கிறார்கள். ஒரு வணிகம் வீழ்ச்சியடைந்தால், வர்த்தகர்கள் அதை உணர்கிறார்கள். ஒரு நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்தால் அதை ஒட்டுமொத்த மக்களும் உணருவார்கள்.

பதினொரு மாதங்களுக்கு முன்னர் நாம் இந்த நிலையை எதிர்கொண்டோம். எங்களிடம் எரிபொருள், மின்சாரம், மருந்து எதுவும் இல்லை. ஒருநாடு என்ற வகையில் நாம் மிகவும் கடினமான சூழ்நிலையை எதிர்கொண்டோம். நாட்டின் பொருளாதாரம் முற்றிலும் முடங்கியது. நான் ஜனாதிபதியாகப் பதவியேற்கும் போது இவ்வாறானதொரு பிரச்சினைக்குரிய சூழல் நாட்டில் இருந்தது. ஆனால், முறையான திட்டத்தின் ஊடாக நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பும் வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்தினோம். மேலும், விவசாயிகளுக்குத் தேவையான உரங்கள் வழங்கப்பட்டன. சரியான நேரத்தில் உரத்தை வழங்கியதால், இந்தமுறை பெரும்போகத்தில் வெற்றிகரமான அறுவடை கிடைத்துள்ளது.

இப்போது எரிபொருள் வரிசைகள் இல்லை. மின்சாரம் உள்ளது. அதன்படி, நாட்டின் பொருளாதாரத்தை முந்தைய நிலையைவிட படிப்படியாக சிறந்த நிலைக்குக் கொண்டுவர முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. நாட்டின் பல அடிப்படைப் பிரச்சினைகளுக்கு தீர்வுகளை வழங்கியுள்ளோம் என்றே கூறவேண்டும். மேலும் பல பிரச்சினைகள் எமக்கு முன்னால் உள்ளன.

ஒரு நாடு வங்குரோத்தடையும்போது, சர்வதேச நாணய நிதியத்திடம்தான் செல்லவேண்டும். சர்வதேச நாணய நிதியத்தைத்தவிர, உதவி செய்யும் வேறு எந்த அமைப்பும் உலகில் இல்லை. பொருளாதாரரீதியில் வீழ்ச்சியடைந்த ஒவ்வொரு நாடும் சர்வதேச நாணய நிதியத்துடன் பேச்சு நடத்தியே மீண்டு வந்துள்ளது. சரிந்த பொருளாதாரத்தில் இருந்து கிரீஸ் மீண்டுவர 13 ஆண்டுகள் சென்றது. பதின்மூன்று ஆண்டுகள் ஜனாதிபதி பதவியில் இருக்கும் எதிர்பார்ப்பு எனக்கு இல்லை.

இந்த வீழ்ச்சியடைந்த பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப ஒரேயொரு ஏணிதான் உள்ளது. அதுதான் சர்வதேச நாணய நிதியம். பல்வேறு அரசியல் கட்சிகள் பல்வேறு கதைகளைக் கூறிவருகின்றன. சரிந்த பொருளாதாரத்தில் இருந்து மீள்வதற்கு வேறு ஏணி இருந்தால் சொல்லுமாறு நான் அவர்களுக்குக் கூறுகின்றேன் - என்றார். (அ-ம-22)

### கடனை...

ஒன்றுதான் மின்கட்டண உயர்வு. இன்று சர்வதேசநாணய நிதியத்தின் அனைத்து நிபந்தனைகளையும் முற்றாகச் செயற்படுத்தியுள்ளோம் - என்று தெரிவித்துள்ளார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க. கண்டியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சர்வதேச நாணய நிதியத்துடன் அரசு கடந்த ஓகஸ்ட் மாதம் பேச்சுக்களை ஆரம்பித்தது. அதன்படி, செப்ரெம்பரில் அதிகாரிகள் மட்டத்தில் உடன்பாடு காண முடிந்தது. அவர்கள் எமக்கு நடைமுறைப்படுத்த பதினைந்து விடயங்களை முன்வைத்தார்கள். டிசெம்பர் 31ஆம் திகதிக்கு முன்னர் அதனை நடைமுறைப்படுத்த சர்வதேச நாணய நிதியம் கால அவகாசம் வழங்கியது. ஆனால், அன்று அதைச் செய்யமுடியவில்லை. பின்னர் ஜனவரி 31ஆம் திகதி வரை அவகாசம் பெற நடவடிக்கை எடுத்தோம். அப்போதும் அந்த 15 விடயங்களை எங்களால் பூர்த்தி செய்யமுடியவில்லை. இறுதியாக பெப்ரவரி 15ஆம் திகதி வரை கால அவகாசம் நீடிக்கப்பட்டது. பெப்ரவரி 15ஆம் திகதி மாலை 6 மணிக்குள் அனைத்து விடயங்களையும் நிறைவேற்றி வாஷிங்டனுக்கு அனுப்பினோம்.

இந்தப் பதினைந்து விடயங்களில் ஒரு விடயம் மட்டுமே தாமதமாகி வருகிறது. அது மின்சாரக் கட்டண உயர்வு தொடர்பானது. மின்சாரசபைக்கு வருடாந்தம் 230 பில்லியன் ரூபா நட்டம் ஏற்படுகிறது. நிறுவனங்களைப் பராமரிக்க அரசாங்க வரிகளைப் பயன்படுத்தவேண்டாம் என சர்வதேச நாணய நிதியம் சுட்டிக்காட்டியுள்ளது. அவ்வாறு நடந்தால் சர்வதேச நாணய நிதியத்தின் ஆதரவு கிடைக்காது என அறிவிக்கப்பட்டுள்ளது. ஆனால், இந்தநாட்டில் ஒருவர் மின்சாரக் கட்டணத்தை உயர்த்தும் முடிவை எதிர்த்தார். இதன் காரணமாக, சர்வதேச நாணய நிதியத்தின் ஆதரவைப் பெறுவது ஆறு வாரங்கள் தாமதமானது. இல்லையென்றால், ஜனவரி இறுதிக்குள் இதனை நிறைவுசெய்திருக்கலாம். தற்போது, எங்களுக்கு வழங்கப்பட்ட 15 விடயங்களும் நிறைவேற்றப்பட்டுள்ளன. இப்போது சர்வதேச நாணய நிதியத்துக்கான சந்தர்ப்பமே உள்ளது.

எங்களுக்கு கடன் வழங்கிய பரிஸ் கிளப், இந்தியா மற்றும் சீனா என்பன கடனை மறுசீரமைக்க இணக்கம் தெரிவித்துள்ளன. அதற்குத் தேவையான நிதி உத்தரவாதத்தை வழங்கும் முறைமை பரிஸ் கிளப்பில் உள்ளது. இந்தியாவிடம் மற்றொரு முறைமையுள்ளது. சீனா மற்றொரு முறையை நடைமுறைப்படுத்துகின்றது. பரிஸ் சமூக நாடுகள் தங்கள் சொந்த முறையைத் தவிர இந்தியாவின் முறையையும் ஏற்றுக்கொண்டன. ஆனால், சீனாவின் முறை குறித்து இன்னும் உடன்பாடு ஏற்படவில்லை.

இது குறித்து மேலும் கலந்துரையாடப்பட்டு வருகிறது. அனைவரையும் ஒரே மேடைக்கு கொண்டுவந்து கலந்துரையாடவேண்டும் என்று சர்வதேச நாணய நிதியமும் பரிந்துரைத்தது. ஆனால், சீனா உலக வல்லரசாக இருப்பதால் அவர்களின் முறை வேறு. 'ஜி-20' நாடுகளின் நிதியமைச்சர்கள் எதிர்வரும் 23ஆம் திகதி இந்தியாவின் பெங்களூரில் பேச்சு நடத்தவுள்ளனர். பொருளாதாரம் வீழ்ச்சியடைந்த நாடுகளின் கடனை எவ்வாறு மறுசீரமைப்பது குறித்து அங்கு ஆராயப்படவுள்ளது. அதில், இலங்கையின் கடன் மறுசீரமைப்பு முறை குறித்து சீன நிதியமைச்சருடன் கலந்துரையாட எதிர்பார்க்கப்பட்டுள்ளது. சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து உதவி பெறாவிட்டால், எதிர்காலத்தில், எரிபொருளின்றி 12 மணி நேர மின்வெட்டுடன் வாழவேண்டிய நிலை ஏற்படும். சிறுபோக உரம் கிடைக்காது. இந்த நிலையில் மக்கள் பல சிரமங்களை எதிர்நோக்க வேண்டி ஏற்படும் - என்றார். (ம-22)

### 21,000...

ஊர்காவற்றுறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அல்லைப்பிட்டி சாட்டி கடற்கரையில் 21 ஆயிரத்து 175 கடலட்டைகளுடன் 12 சந்தேகநபர்கள் நேற்றுக் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இருவேறு நடவடிக்கைகளில் அவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இதுகுறித்து மேலும் தெரியவருவதாவது:-

சட்டவிரோதமான முறையில் கடலட்டை எடுத்துச்செல்லப்படவுள்ளதாக கிடைத்த தகவலுக்கு அமைய நேற்றுமுன்தினம் பொலிஸார் முன்னெடுத்த நடவடிக்கையின்போது 9 ஆயிரத்து 875 கடலட்டைகளுடன் 11 சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டனர். நேற்றையதினமும் கடலட்டை எடுத்துச்செல்லப்படவுள்ளதாகக் கிடைத்த தகவலுக்கு அமைய முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கையின்போது 11 ஆயிரத்து 300 கடலட்டைகளுடன் சந்தேகநபரொருவர் கைதுசெய்யப்பட்டார். 12 சந்தேகநபர்களும் ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் நேற்றுமுற்படுத்தப்பட்டனர். அவர்கள் அனைவரும் தலா 50 ஆயிரம் ரூபா பெறுமதியான ஆட்பிணையில் செல்வதற்கு நீதிமன்றம் உத்தரவிட்டது.

இதேவேளை - பருத்தித்தீவில் சீனர்கள் விட்ட 40 ஆயிரம் கடலட்டைக் குஞ்சுகளில் வெறும் 100 குஞ்சுகள்தான் மீண்டும் பிடிக்கப்பட்டுள்ளன என்ற செய்திகள் அண்மையில் வெளிவந்தமை யாவரும் அறிந்ததே. (அ-ம-125)

### லேசர்...

கைதடியில் கடந்த இரு தினங்களுக்கு முன்னர் நடைபெற்ற, சனசமூக நிலையமொன்றின் நிகழ்வில் பயன்படுத்தப்பட்ட லேசர் கதிர்வீச்சால் 50 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் கலந்துகொண்ட கூட்டத்திலேயே இந்த அசம்பாவிதம் இடம்பெற்றுள்ளது. இதையடுத்து அவர்கள் அனைவரும் தனியார் மருத்துவமனையொன்றில் சிகிச்சை பெற்றுள்ளனர்.

லேசர் கதிரொளிகள் நிகழ்வுகள் மற்றும் களியாட்டங்களில் பயன்படுத்தப்படுவது வழமை. ஆயினும் அதன் அளவு மற்றும் செறிவுத்தன்மை தொடர்பில் பல்வேறு வரையறைகள் உள்ளன. இந்த வரையறைகளைப் பின்பற்றாமல் லேசர் கதிரொளி பயன்படுத்தப்பட்டமையே அசம்பாவிதத்துக்குக் காரணம் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (அ-ம-ஒ-5)

### 'மாமனிதர்'...

பல்கலைக்கழக வளாகத்தில் நேற்று அஞ்சலி செலுத்தப்பட்டது. அதைத் தொடர்ந்து அவரின் இறுதிக் கிரியைகள் காரைக்கால் இந்து மயானத்தில் முன்னெடுக்கப்பட்டன.

முன்னாள் துணைவேந்தரும் பேராசிரியருமான விக்னேஸ்வரனுக்கான இறுதி அஞ்சலி நிகழ்வு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நேற்று முன்னெடுக்கப்பட்டது. பலநூறு மாணவர்கள், விரிவுரையாளர்கள், பணியாளர்கள் என நூற்றுக்கணக்கானவர்கள் திரண்டு உணர்வுபூர்வமாக இந்த அஞ்சலியை முன்னெடுத்தனர். பேராசிரியரின் புகழுடல் சிவப்பு, மஞ்சள் கொடியால் போர்க்கப்பட்டிருந்தது. அஞ்சலியைத் தொடர்ந்து அவரின் புகழுடல் காரைக்கால் இந்து மயானத்துக்குக் கொண்டு செல்லப்பட்டு, அங்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பாதுகாப்புப் பணியாளர்களின் மரியாதையுடன் தகனம் செய்யப்பட்டது.

இதேவேளை - முன்னாள் துணைவேந்தர் விக்னேஸ்வரன் தமிழ்த் தேசியத்துக்காக ஆற்றிய பணிகளுக்காக அவருக்கு 'மாமனிதர்' என்ற கௌரவம் வழங்கப்படுவதாக 'தமிழீழ விடுதலைப் புலிகளின்' கடிதத் தலைப்புடன் கூடிய அறிவிப்பொன்று மின்னஞ்சல் ஊடாக, ஊடகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-125)

### 'உளட க...

இந்து சமயப்பேரவையால், நெருக்கடியான பல்வேறு சூழ்நிலைகளிலும் அச்சுறுத்தல்களுக்கு மத்தியிலும் சைவத்தமிழர்களின் விடிவுக்காக வீர உணர்வை வெளிக்கொண்டுவந்தமைக்காக 'உதயனுக்கு' இந்த விருது வழங்கப்படவுள்ளது. பேரவையின் நடராஜர் மண்டபத்தில் இன்று பி.ப. 3 மணிக்கு தெய்வீக இசை ஆராதனை நிகழ்வு இடம்பெறவுள்ளது. இதன்போதே இந்த விருது 'உதயன்' குழுமத்தின் தலைவரும் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமான ஈஸ்வரபாதம் சரவணபவனிடம் வழங்கிவைக்கப்படவுள்ளது.

இதேவேளை- முன்னாள் இந்துமத குரு பீடாதிபதி சிவஸ்ரீஸ்கந்தசாம்ப சிவசிவாச்சார்ய சின்மம் 'சிவபூஜாக் கிரம ஜோதி' விருது தேகாந்த நிலையில் வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளார். மேலும் தேகாந்த நிலை கலைஞர்களுக்கான லயஞான குபேரபூபதி விஸ்வலிங்கம் தெட்சணாமூர்த்தி 'லயஞான லாவண்யப் பேரரசு' விருதும், விவகார வித்வமணி என்.ஆர். சின்னராசா 'சுரஞான கரவேக சிம்மம்' விருதும், கலியுக வரத சுரதாளக்கியான பாலநந்தீஸ்வரர் கே.பழனிமலை 'சுரஞான கரவேக பூமி' விருதும், வயலின் வித்துவான் இளைய ஞான திலகம் உருத்திராபதி இராதாகிருஷ்ணன்'இசைஞான சக்கரவர்த்தி' விருதும் வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளனர். அத்துடன் சைவத்தமிழ் எழுச்சிக்காக அர்ப்பணிப்புடன் செயற்படும் சிவசேனை அமைப்பின் தலைவர் மறவன்புலவு சச்சிதானந்தன் 'பரசமய துவம்ச கோளரி' விருதும் வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளார். (அ-ம)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



மலர்வு
29.12.1949

உதிர்வு
23.01.2023

கடந்த (23.01.2023) திங்கட்கிழமை அன்று சிவபதம் அடைந்த எங்கள் குடும்பத்தலைவி

## அமரர் திருமதி நடராசா தங்கமலர் (அன்னம்)

(உரிமையாளர், மைதிலி நகை மாடம் (தனியார் நிறுவனம்))

### மண்கும்பான் - புதல்வி

அன்பால் மனதை அளாவிய தெய்வம்
முன்போல் எம்முன் இல்லையே இங்கு!
கண்போல் காத்த கருணையும் போச்சே!
உன்பால் இரங்கி அழுகிறோம் அம்மா!

அருகினில் இன்றிப் போனதே துன்பம்
முழுத்துயர் தந்து போயினை எங்கு?
கண்ணீர் ஒன்றே மிகுதி ஆச்சே!
ஒருதரம் மீண்டும் ஓடோடி வாம்மா!

இருவிழி கண்ணீர் ஊற்ற
மறுமொழி கூறாது ஏனோ
தெருவழி நடந்தும் உன்னைத்
மறுபடி எமக்கே தாயாய்

இதயத் துயரதும் வாட்ட
மறைந்தனை எம்மை விட்டு?
தேடுகிறோம் எங்கே போனாய்?
மண்ணினில் நீயே வாம்மா!

அன்னாரின் அந்தியேட்டிக்கிரியைகள் கடந்த (20.02.2023) திங்கட்கிழமை காலை 06.00 மணியளவில் புனித சாட்டி தீர்த்தக்கரையில் நடைபெற்றது. வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (22.02.2023) புதன்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும். அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

மேலும் அன்னாரின் மறைவுச் செய்தி அறிந்து பல வழிகளிலும் எமக்கு ஒத்துழைப்பு மற்றும் அனுதாபம் தெரிவித்த அனைத்து உள்ளங்களுக்கும் வீட்டுக்கு வருகை தந்து அஞ்சலி செலுத்தியவர்களுக்கும், தொலைபேசி, சமூகவலைத்தளங்கள், பத்திரிகைள் போன்ற ஊடகங்களிலும், கண்ணீர் அஞ்சலி செலுத்தியவர்கள், துண்டுப்பிரசுரங்கள் வெளியீட்டோருக்கும் மலர்வளையங்கள் வைத்து அஞ்சலி செலுத்தியோருக்கும், மேலும் இறுதி ஊர்வலத்தில் கலந்துகொண்ட அனைத்து உள்ளங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**குடும்பத்தினர்**

தொ.பேசி 077 376 8952

(மைதிலி நகை மாடம் (தனியார் நிறுவனம்))

இல. 55, அம்பலவாணர் வீதி,
அத்தியடி, யாழ்ப்பாணம்.

(CR 39255)(3/6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com

பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 22.02.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.